# இராசராச சோழன் வரலாற்றுக்கூடம்

ஆக்கியோர்

மா. சந்திரமூர்த்தி

கி. சீதரன்

இரா. ப. கருணானந்தன்

வெளியிட்டோர்

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை-600 028.

1985

முதற் பதிப்பு - 1985
த. நா. தொ. பொ ஆ. துறை வெளியீடு எண். 99

நூல் சேர்க்கை
எண்.
சென்னை-600 008

© தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை

# இராசராச சோழன் வரலாற்றுக்கூடம்

ஆக்கியோர்
மா. சந்திரமூர்த்தி
கி. சிதரன்
இரா. ப. கருணானந்தன்

விலை ரூ.

வெளியீடு :
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை

# முகவுரை

இராசராசன் தொல்பொருட்காட்சியகத்தைக் காண வரும் பொது மக்களுக்குக் கைவிளக்காக, வழிகாட்டியாக இக்கையேடு எழுதப்பட்டுள்ளது. இராசராச சோழன் அரும்பொருட் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ள சோழர் காலத்துச் சிற்பங் களைப் பற்றிய விளக்க உரைகள் சிற்பப் பிரிவுப் பகுதி யிலும், செப்புத் திருமேனிகளைப் பற்றிய விளக்கங்கள் செப்புத் திருமேனிகள் எனும் பகுதியிலும், சோழர் காலத்தைச் சேர்ந்த பல்வேறு கோயில்களிலிருந்து அரிதின் முயன்று படியெடுக்கப்பெற்றுள்ள சோழர் காலக் கல்வெட்டுக் ளின் படிகள் பற்றிய விளக்கங்கள் கல்வெட்டுகள் என்னும் பகுதியிலும், செப்பேடுகள் பற்றிய விளக்க உரைகள் செப் பேடுகள் என்னும் பகுதியிலும், பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்துள்ள சோழர் கால இசைக் கருவிகளைப் பற்றிய செய்திகள் இசைக் கருவிகள் என்னும் தலைப்பிலும் அமைக்கப் பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதென்றால் இராசராசசோழன் அரும் பொருட்காட்சியகத்துக்குள் செல்லும் பார்வையாளர்கள் சிறிது நேரம் தம்மை மறந்து சோழர் காலத்துக்கே சென்றது போன்ற உணர்வினை ஏற்படுத்தும் வகையில் இத்தொல்பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறின் மிகையாகாது. இத்தொல்பொருட்காட்சியகத்தைப் பற்றிய துணை நூல் (கையேடு) சோழர் காலக் கலை வரலாற்றைப் பயிலும் மாணவர்க்குப் பெரிதும் துணையாயிருக்கும்.

இராசராசனின் ஆயிரமாவது ஆண்டுவிழாவையொட்டித் தஞ்சையில் 'இராசராசனின் வரலாற்றுக்கூடம்' அமைக்கத் திட்டம் வகுத்து அரசின் ஆணையைப் பெற்றவர் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள். அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொல்பொருட்காட்சியகம் அமைப்புப் பணியில் தலைமை தாங்கி எங்களை இயக்கியும், கையேட்டு நூலை உருவாக்கித் தருமாறு ஊக்குவித்தும், எங்களை வழி நடத்திச் சென்றவர் அன்றைய இயக்குநர் (பொறுப்பு) திரு. நடன. காசிநாதன் அவர்கள். அவர்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை அன்புடன் படைக்கின்றோம்.

இந்நூலைச் சிறப்பான முறையில் அச்சிட உதவிய கல்வெட்டாய்வாளர்கள் திரு. அ. இராசேந்திரன், திருமதி. வசந்த கல்யாணி மற்றும் அச்சுப்பிரிவுப் பணியாளர்களுக்கு எங்களது நன்றி.

அன்புடன்
**மா. சந்திரமூர்த்தி**
**கி. சீதரன்**
**இரா. ப. கருணானந்தன்**

# பதிப்புரை

சோழ அரசை சோழப் பேரரசாக மாற்றியவன் மாமன்னன் இராசராசன். தில்லையில் மூடிக்கிடந்த தேவார ஏடுகளைத் தேடிக் கண்டு பிடித்து வெளிக் கொணர்ந்து தமிழ் அன்னைக்கு இலக்கிய ஆரம் சூட்டி மகிழ்ந்தவன். அனைத்துச் சமயங் களையும் ஆதரித்துப் போற்றி, உலகளந்தான் கோலால் தமிழகம் முழுவதும் முதன் முதலாக அளந்து, உலகோர் வியந்து கண்டுகளிக்கும் வண்ணம் ஒப்பற்ற கலைக்கூடமாகத் தென்னக மேரு எனத் தஞ்சைப் பெரிய கோயிலை அமைத்துச் சிறந்தவன். இத்தகு பேரரசன் கி.பி. 985-இல் முடிபுனைந்து தமிழகத்தை ஆண்டான் என வரலாறு கூறுகிறது. எனவே இராசராசன் முடி சூடிய ஆயிரமாவது ஆண்டு விழாவினை 1984-ஆம் ஆண்டு தஞ்சையில் சிறப்பாக நடத்த வேண்டும் எனத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முடிவு செய்தார்கள்.

அவ்வண்ணமே அமைக்கப்பட்ட இக்காட்சியகம் சோழர் களின் ஆட்சித் திறத்தை எடுத்துக் காட்டும் சிறப்பிடமாக விளங்குகிறது. இக்காட்சியகத்தை நாள்தோறும் ஆயிரக்கணக் கான மக்கள் பார்த்து, சோழர் காலச் சிறப்பை உணர்ந்து செல் கிறார்கள். இத்தகு சிறப்புடைய இக்காட்சியகத்தின் பொருட் களைக் காண வரும் பொதுமக்களுக்கு அவற்றின் சிறப்பை விளக்கிக் கூறும் வகையில் இத்துறைப் பதிவு அலுவலர்களான திரு. மா. சந்திரமூர்த்தி, திரு. கி. சீதரன் மற்றும் காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் ஆகியோர் இத் துணை நூலை உருவாக்கியுள்ளனர். சிறிய நூலாயினும் காட்சியகத்தைக் காண வருவோருக்குச் சிறந்த துணை நூலாக அமைந்துள்ளது. நூலை உருவாக்கிய இத்துறை அலுவலர்களைப் பாராட்டு கிறேன். இந்நூலுக்கு அருமையான அணிந்துரை அளித் திருக்கும் தமிழ்வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர் அவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராசராசசோழன் அருங்காட்சியகத்திற்காக கலைப் பொருட்களைச் சேகரிப்பதில் முன்னின்று நடத்தியவர் பதிவு அலுவலர் திரு. கு. தாமோதரன். ஆவர். இக்காட்சியகத்தைச் சிறப்பாக அமைத்த பெருமை இத்துறையின் அனைத்துப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைச் சாரும். மேலும் இக்காட்சியகத்திற்குத் தொல்கலைப் பொருட்களை இலவசமாகவும், கடனாகவும் வழங்கிச் சிறப்பித்தவர்கள் பலர்:

1. ஆணையர் - இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.
2. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.
3. இயக்குநர் - அரும்பொருட்காட்சியகம், சென்னை.
4. திருமிகு. வே. அப்பாக்குட்டி பிள்ளை, வேதாரண்யம்.
5. ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் காசிமடம் திருப்பனந்தாள்.
6. கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தை.
7. முதல்வர், அரசினர் சிற்பக் கல்லூரி, மாமல்லபுரம்.
8. துணை ஆணையர் - இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்.
9. தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
10. திருமிகு. கே. இராமநாதகுருக்கள், திருவலஞ்சுழி.
11. காப்பாளர், கலைக்கூடம், தஞ்சாவூர்.
12. நிர்வாக அதிகாரி, மருந்தீசுவரர் கோயில், திருத்துறைப் பூண்டி.
13. திரு. கோவிந்தராசனார், கரந்தை.

அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

டாக்டர். ஒளவை நடராசன்
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளர்

சென்னை-9.
26-4-85.

# அணிந்துரை

சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரத்தாண்டு முடி சூட்டு விழாவை 1984 செப்டம்பர்த் திங்கள் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்களில் சீரிய முறையில் நமது அரசு கொண்டாடியது. அவ்விழாத் தொடர்பாகத் தஞ்சையில் சோழர் காலச் சமுதாய, அரசியல், கலை மாட்சிகளைக் கவினுறக் காட்டும் காட்சியகத்தை அமைக்க நமது துறை விழைந்ததோடு 'இராசராசன் தொல்பொருட்காட்சியகம்' எனக் காட்சியகத்துக்குப் பெயர் சூட்டவும் முடிவு செய்தது.

தஞ்சை அரண்மனை வளாகத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறை காட்சியகத்தை வனப்புற அமைத்துள்ளது. காட்சியகத்தில் காணப்பெறும் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், ஓவியங்கள், கலைப் பொருட்கள், செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுக்களோடு தஞ்சை மாநகரின் பழந்தோற்றப் படிமம் முதலிய பொருண்மைகளைப் பற்றிய துணை நூலைத் தொல்பொருள் ஆய்வுத்துறை இப்போது வெளியிடுகிறது. பதிவலுவலர்கள் திரு. மா. சந்திரமூர்த்தி, திரு. கி. சிதரன், காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் ஆகிய மூவரும் இக்கையேட்டினை இணைந்தெழுதியுள்ளனர். காட்சியகத்தைக் காணும் கலையார்வலர்களுக்கு இந்நூல் சிறந்த கையேடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. காட்சியகக் கலைப் பொருட்களைப் பற்றிய குறிப்புக்கள் பொருத்தமாயும், திருத்தமாயும் பொலிகின்றன.

தமிழகத்தில் வரலாற்று வண்ணம் பூண்ட அனைத்திடங்களிலும் தொல்பொருள் ஆய்வுத்துறை காட்சியகங்களை நிறுவி வருகிறது. அவ்வகையில் இக்காட்சியகம் முதனிலை பெறுவ

தாகும். காட்சியகத்தை அமைத்துத் துணை நூலையும் வெளி யிடும் தொல்பொருள் ஆய்வுத்துறையைப் பாராட்டுகிறேன். நூலாசிரியர்களை வாழ்த்துகிறேன். காட்சியகங்கள் பெருக்வும் துணை நூல்கள் மலரவும் இத்துறை நற்பணியாற்றி வருகிறது. இயக்குநர் நிலையில் திரு. நடன. காசிநாதன் விழாக் கொண்டாடியதோடு துறையினரை ஊக்கிச் சிறந்த நூல்களை வெளியிடச் செய்தமையும் பாராட்டுக்குரியன.

அன்பன்

ஔவை நடராசன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | பதிப்புரை | |
| 3. | அணிந்துரை | |
| 4. | சிற்பப்பிரிவு | |
| 5. | படிமப்பிரிவு | 25 |
| 6. | இசைக் கருவிகள் | 33 |
| 7. | விளக்குகளும், பரிகலன்களும் | 38 |
| 8. | செப்பேடுகள் | 46 |
| 9. | கல்வெட்டுக்கள் | 52 |
| 10. | பறைகள் | 59 |
| 11. | பிற்சேர்க்கை | 64 |

# சிறப்புப் பிரிவு

# பிள்ளையார்

தமிழ்நாட்டிலுள்ள குடைவரைக் கோயில்களிலும், கட்டிடக் கோயில்களிலும் பிள்ளையார் சிற்பங்களைக் காணலாம். பாண்டிய நாட்டிலுள்ள பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயில் பிள்ளையாரே மிகவும் பழமை வாய்ந்த (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) சிற்பமாகக் கருதப்படுகிறது. பல்லவ மன்னர்களும் தாம் எடுப்பித்த குடைவரைக் கோயில்களில் பிள்ளையாரைத் தோற்றுவித்துள்ளனர்.

அஃதன்றி சோழர், விசயநகரர், நாயக்கர், மராட்டிய மன்னர்கள் எடுப்பித்த கட்டிடக் கோயில்களில் பிள்ளையாரின் சிற்பங்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. முற்காலச் சோழர் காலத்துக் கோயில்களின் அர்த்தமண்டபத் தென் திசைக் கோட்டங்களில் இவ்வுருவங்கள் நின்ற, நடமிடும், அமர்ந்த கோலங்களில் காட்டப்பட்டுள்ளன. முற்காலச் சோழர் காலத்துப் பரிவார ஆலயங்களில் இதுவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இவ்வாலயத்தைப் பெரும்பாலும் கோயில் திருச்சுற்றின் தென் மேற்கு மூலையில் காணலாம்.

பெரும்பாலும் சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் பிள்ளையார் உருவத்தை எடுப்பித்ததைக் குறித்தும், எழுந்தருளிவிப்பதற்கு அளிக்கப்பட்ட கொடைகளைக் குறித்தும் ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. சோழர் கல்வெட்டுகளில் முருகனை இளைய பிள்ளையார் என்றும், விநாயகரை மூத்த பிள்ளையார் என்றும் குறிக்கும் மரபைக் காணலாம். சோழ நாட்டில் கிடைத்துள்ள பிள்ளையார்கள் சிலவற்றை இக்காட்சியகத்தில் காணலாம்.

**பிள்ளையார்** *(அமர்ந்த நிலை)*
*கோயில் தேவராயன்பேட்டை, பாபநாசம் வட்டம்*

இவ்வுருவம் தாமரைப் பீடத்தின்மீது வலது காலைக் குத்திட்டு வைத்து இடது காலை மடித்து நான்கு கைகளுடன் லளிதாசனத்தில் அமர்ந்தகோலத்தில் காணப்படுகிறது.

நீள் சதுரவடிவில் கீழ்நோக்கி ஒடுங்கிய யானை முகமும், இடம்புரியாக வளைந்து செல்லும் மெலிந்த துதிக்கையும், இலை வடிவாக அமைந்து மேல் தோள் வரை படிந்துள்ள விரிந்த காதுகளும், எளிய தோள்களும், குறுகிய மார்பும், தசைப்பற்றுள்ள குட்டையான கால்களும், ஆடை அணியும் இச்சிற்பத்தின் காலத்தைக் கணிக்க உதவி செய்கின்றன. இச்சிற்பம் கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலைப் படைப்பாகும்.

இச்சிற்பம் இளஞ்சிவப்பு நிறக் கல்லைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வண்ணக் கற்களிலுள்ள சிற்பங்கள் மிகக் குறைவாகவே இப்பகுதியில் கிடைக்கின்றன. கோயில் தேவராயன்பேட்டைக் கோபுரத்தின் முன்புறம் வழிபாடற்றுக் கிடந்த இச்சிற்பம் இங்கு எடுத்துவரப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப்பிள்ளையார் சிற்பம் கோயில்தேவராயன் பேட்டைக் கோயில் பரிவார ஆலயத்திற்குரிய சிற்பமாக இருத்தல் வேண்டும்.

**பிள்ளையார்** *(நின்ற நிலை)*
*திருப்பாலத்துறை, பாபநாசம் வட்டம்*

இவ்வுருவம் தாமரை இருக்கை மீது வலது காலை ஊன்றி, இடது காலைச் சற்று முன் வைத்து நான்கு கைகளுடன் நின்ற நிலையில் காணப்படுகிறது.

இவ்வுருவத்தின் நிற்கும் நிலை, அங்கங்களின் அமைப்பு ஆடை அணிகலன்களின் தன்மை, தலையின் மீது காட்டப்பட்டுள்ள குடை ஆகியவற்றைக் கொண்டு இச்சிற்பத்தின் காலத்தை கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலையாகக் கருதலாம். இச்சிற்பம் திருப்பாலத்துறை கோயில் திருச்சுற்றுப் பகுதியிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது. இது இவ்வூர்ச் சிவாலயத்தின் அர்த்தமண்டபத் தேவகோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

**அடிமுடிகாணா அண்ணல்** *12 x 94 செ.மீ.*
*திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்*

அடிமுடிகாணா அண்ணலாக ஒளிப்பிழம்பாகக் காட்சி அளிக்கும் இலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்படும்

தோற்றம், அடியின் கீழ் 'அடிதேடி அறிவல்' எனச் சென்ற வராகம் 'மேலே முடிதேடி முன்வருவல்' என முனைந்து செல்லும் அன்னம் ஆகியவற்றுடன் லிங்கோத்பவமூர்த்தியின் உருவம் காட்சி அளிக்கிறது.

சிவனின் தலையை நீண்ட சடை மகுடம் அலங்கரிக்கிறது. மேலிரு கைகளில் மழுவும், மானும் விளங்க, கீழ் வலக்கை அபயமளிக்க, கீழ் இடக்கை தொடைமீது அமைந்த நிலையில் தோற்றமளிக்கிறது. அடியும், முடியும் மறைத்து நேராக நின்ற நிலையில் இவ்வுருவம் காட்டப்பட்டுள்ளது.

சதுரமான பரந்த முகமும், நெற்றிக் கண்ணுடன் கூடிய நுதலும், எடுப்பான நாசியும், சற்று மெல்லப் பிரிந்த உதடுகளும் கொண்டு விளங்கும் 10-ஆம் நூற்றாண்டின் இவ்வுருவம் சோழர் காலத்துக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இச்சிற்பம் திருவலஞ்சுழி சிவன் கோயில் இரண்டாம் திருச்சுற்று திருமால்பத்தியின் மேல்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டு உள்ளது. இச்சிற்பம் திருவலஞ்சுழி பழைய சிவாலய கருவறையின் மேற்றிசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

**சங்கூதும் பூதகணம்** *85x51 செ.மீ.*
*சிவபுரம், செங்கை மாவட்டம்*

தசைப் பற்றுள்ள குட்டையான அங்கங்களும், தடித்த விரல்களும், பருத்த வயிறும், பெருத்த உடலுங்கொண்டு விளங்கும் இவ்வுருவம் சோழர் காலத்துப் பூதகணங்களுக்குச் சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதன் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

**சூரியன்** *125x50 செ.மீ.*
*சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டம்*

சதுரமான முகமும், விரிந்த நுதலும், வில்லை ஒத்த புருவமும், கீழ் நோக்கிப் பார்வையைச் செலுத்தும் நீண்ட கண்களும், எடுப்பான நாசியும், மலர்ந்த உதடுகளும், திரண்ட

தோள்களும், விரிந்த மார்பும், அளவான அரையும், வலுவான கால்களும், கைகளும் முறையாக அமைந்து காணப்படுகிறது. சோழர் கலை. காலம் கி பி. 11-ஆம் நூற்றாண்டு.

**பெண்காட்டும் உருவான்** *122x46 செ.மீ.*

*வீராக்கன், தஞ்சாவூர் மாவட்டம்*

வலப்பாகத்தில் சிவனும், இடப்பாகத்தில் உமையுமாய் ஒரே உருவில் அம்மையையும் அத்தனையும் இணைத்திருக்கிறார்கள் சோழர்காலச் சிற்பிகள். அண்ணலின் இரு கைகள் உடைந்துள்ளன. இவற்றில் மேல் வலக்கை மழுவைத் தாங்கிய நிலையில் இருந்திருக்கவேண்டும். அம்மையின் பக்கத்தில் உள்ள இரண்டு கைகளில் மேலிடக்கை மலரைப் பிடித்தும், கீழ் இடக்கை பின்புறமுள்ள நந்தியின் தலைமீதும் அமைந்துள்ளது. இந்த அம்மையும் அப்பனும் இணைந்து நிற்கும் திருக்கோலத்தையே அர்த்தநாரி எனக் கூறுகிறோம். இவ்வுருவம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பிற்காலச் சோழர் கலை.

**உமாசகித சந்திரசேகரமூர்த்தி**

*திருச்சோற்றுத்துறை, தஞ்சாவூர் மாவட்டம்*

சோழ மன்னர்கள் சாளுக்கிய நாட்டிலும், நுளம்ப நாட்டிலும் போர் தொடுத்து வெற்றி வாகை சூடித் திரும்பியபோது, அவ்வெற்றியின் நினைவாகக் கொண்டு வந்த கலைச்செல்வங்களில் இதுவும் ஒன்று. இவ்வுருவம் தஞ்சை மாவட்டம், திருச்சோற்றுத்துறை சிவாலயத்தின் நந்தவனத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. சிவனும், உமையும் ஒரே பீடத்தில் நின்ற நிலையில் உமாசகித சந்திரசேகரமூர்த்தியாகக் காட்சி அளிக்கின்றனர். இது ஐதராபாத்தில் பிர்லா தொல்பொருள் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் அமைத்துள்ள அருங்காட்சியகத்தில் உள்ள உமாமகேசுவரர் சிற்பத்துடன் ஒப்பிடத் தக்கது.

இவ்வுருவங்கள் கருப்புநிறக் கருங்கல் பலகையில் சீரிய முறையில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவங்களின் உடல் அமைப்பு, நிற்கும் நிலை, முகப்பொலிவு, மேனியின் அழகு,

ஆடை அணிகலனின் கலைச் சிறப்புகளைக் கொண்டு இவற்றை சாளுக்கியர் கலைப்படைப்பாகக் கருதலாம். காலம் கி.பி. 9—10-ஆம் நூற்றாண்டு.

## தட்சிணாமூர்த்தி

சிவனது குருமூர்த்தமே தட்சிணாமுர்த்தி வடிவமெனப்படும். தட்சிணாமூர்த்தியினுடைய வடிவம் ஞானதட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வியாக்யான தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி என நான்கு வகைப்படும்.

இதில் இசையை உபதேசிக்கும் நிலை வீணாதர தட்சிணா மூர்த்தி வடிவம் எனப் பெயர்பெறும். இதனை வீணாதரர் எனவும் கூறுவர்.

சிவாலய கருவறையின் தென்புற தேவகோட்டத்தில் தட்சிணாமூர்த்தியின் உருவம் அமைக்கப்படுவது மரபு. மேலும் வீணாதரர் உருவத்தைக் கோயில் விமானத்தில் கிரீவ கோட்டத்திலும், தேவகோட்டத்திலும் அமைக்கும் வழக்கம் சோழ நாட்டில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கியது. எடுத்துக்காட்டாக நார்த்தாமலை, லால்குடி, கீழையூர், திருவல்லம் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களைக் கூறலாம்.

சோழர் காலத்து வீணாதரர் வடிவங்களில் தொன்மை வாய்ந்தது நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரத்து வடிவமே ஆகும். இவ்வுருவம் இருக்கையில் அமர்ந்து, இடக்கையில் வீணை பற்றி, வலக்கை விரல்களால் மீட்டும் நிலையில் காட்டப் பட்டுள்ளது மேற்கைகள் முறையே சூலமும் அக்கமாலையும் ஏந்தியுள்ளன. இது விமானத்திலுள்ள மாடச்சிற்பமாகும். திருவல்லம் பில்வாதேசுவரர் கோயில் வீணாதரர் உருவம் நந்தி யின் மீது வீராசனத்தில் அமர்ந்து வீணையை மீட்டும் நிலையில் விமான தேவதையாக உள்ளது.

லால்குடி சப்தரிஷீசுவரர் கோயில் வீணாதரர் நின்ற கோலத்தில் வீணை ஏந்தியுள்ளது. இது தேவகோட்டத்தில்

அமைந்து காணப்படுகிறது. இங்குள்ள திருத்தவத்துறைப் பெருமான் என்ற பண்டைய கோயில் பல்லவர் காலத்தில் மண் தளியாக இருந்து இராசகேசரியின் 27-ஆம் ஆண்டிலோ சற்று முன்னரோ கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள வீணாதரர் கி பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலையாகும்.

சற்றேறக்குறைய லால்குடி உருவத்தை ஒத்து விளங்கும் மற்றொரு சிற்பத்தைத் தஞ்சை மாவட்டம் திருவேதிக்குடியில் காணலாம். இவ்வுருவம் சுருண்ட சடை விரிந்து வனப்பூட்ட, இடது காதில் சுருள் தோடும், கழுத்தணி, தோள்வளை, வளையம், வயிற்றுக் கச்சை, கீர்த்தி முக இடைக்கச்சை, கழல் ஆகியன அணிசெய்ய, முகத்தில் சிந்தனை தவழ, சிறுமுறுவல் செய்ய, கையிலே நீண்ட வீணை ஏந்தி, அவ்வீணையின் நாதத்தில் இணைந்து, எழில் வாய்ந்த திருவுருவாய், எழுந்தருளிய திருக்கோலமாக உள்ளது. இவ்வுருவம் கி. பி. 9—10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**வீணாதர மூர்த்தி** *134x36 செ.மீ.*
*திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்*

இவ்வுருவம் குள்ள சிவகணத்தின் தலைமீது வலக் காலை ஊன்றி, இடக் காலைத் தாமரை இருக்கைமீது நிறுத்தி இரண்டு கைகளில் நீண்ட வீணையைப் பற்றி மீட்டும் நிலையில் காட்டப் பட்டுள்ளது. வீணையின் தண்டும், அவ்வீணையைப் பற்றி மீட்டும் கைகளும் காணமுடியாதவாறு சிதைந்துள்ளன.

இசையை உபதேசிக்கும் வீணாதரர், இதழ்களில் இளநகை புரியக் கழுத்தைத் திருப்பி எழிலாக நின்றகோலத்தில் காட்டப் பட்டுள்ளார். இச்சிற்பத்தின் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழர் கலை.

**நான்முகன்** *68x33 செ.மீ.*
*திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்*

சதுரமான முகமும், கோடிட்ட புருவமும், தியானத்தில் அமைந்த மூடிய அரைக்கண்களும், எடுப்பான நாசியும், மூடிய உதடுகளும் நான்முகனின் முகப்பொலிவை அழகுற வெளிப் படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் யோகநிலையில் உள்ள நான்முகனின் சிற்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அழகும் கலையும் நிறைந்த அரிய சிற்பமாக இவ்வுருவம் கருதப்படுகிறது. இவ்வுருவத்தின் கலைச் சிறப்பைக் கொண்டு இச்சிலையின் காலத்தை கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகக் கணிக்கலாம்.

**நான்முகன்** 76x41 செ.மீ.
சோழபுரம், கும்பகோணம் வட்டம்

இவ்வுருவம் செவ்வக வடிவான இருக்கையின்மீது இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டுத் தாமரை மலர் மீது வைத்த நிலையில், அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. நான்முகனின் நான்கு கைகளில் பின்னிரு கைகள் முறையே அக்கமாலையையும், கெண்டியையும் பற்றிய நிலையிலும், முன்னிரு கைகள் அபயத்திலும், ஏடு ஏந்தும் நிலையிலும் உள்ளன.

சதுரமான முகமும், விரிந்த நுதலும், தூக்கிய புருவமும், கீழ்நோக்கிப் பார்வை செலுத்தும் அமைதியான கண்களும், அகன்ற நாசியும், மடித்த உதடுகளும், மென்மையாக அமைந்து ஆழ்ந்த அமைதியுடன் விளங்குகிறது. இவ்வுருவத்தின் மூன்று முகங்களின் தோற்றம், தலைக்கோலம், அமைதிதவழும் முகப்பொலிவு, அங்கங்களின் தன்மை, ஆடை அணிகள்யாவும் கொண்டு இச்சிற்பம் கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டாகக் கருதப் படுகிறது. சாம்பல் நிறமான கல்லில் இவ்வுருவம் செதுக்கப் பட்டுள்ளது. இக்கல்லின் முன்புறம் உருவமும், பின்புறம் எளிய பலகையை ஒத்தும் காணப்படுகிறது.

இவ்வுருவம் சோழர்காலக் கோயிலின் அர்த்த மண்டபத் தேவகோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும். சோழர் கலையை வெளிப்படுத்தும் இச்சிற்பம் வனப்புடன் விளங்குகிறது.

## அரவரசன்

மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர் காலப் புடைப்புச் சிற்பங்களில் நாகன், நாகினி ஆகியோரது உருவங்கள்

காணப்படுகின்றன. அவை கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. திருப்பரங்குன்றத்தில் உள்ள முற்காலப் பாண்டியர் சிற்பங்களிலும் இவ்வுருவைக் காணலாம். நெல்லை மாவட்டம் சொக்கம்பட்டிக் குடைவரைக் கோயிலில், தலையில் முத்தலை நாகம் குடை கவிழ்க்க, இளமையும், வலிமையும் மிக்க நாக குமாரனை இரு கைகளுடன் நின்ற நிலையில் புடைப்புச் சிற்பமாக தோற்றுவித்துள்ளனர் முற்கால பாண்டியர். வலது கையில் தாமரை மலரைப் பிடித்து, இடது கையை இடையில் கொண்டு நிற்கும் இவ்வுருவம் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பல்லவ, பாண்டியர்களைத் தொடர்ந்து முற்காலச் சோழர்களும் இவ்வுருவைப் போற்றி வணங்கினர் என்பதை அண்மையில் கிடைத்த சிலைகள் உணர்த்துகின்றன.

**அரவரசன்** *86x46 செ.மீ.*
*திருமேற்றளிகை-பழையாறை, கும்பகோணம் வட்டம்*

ஐந்து தலை அரவம் தலையின் பின்புறம் குடை கவிழ்க்க, கரண்ட மகுடம் அணிந்து, காதுகளில் மகரக் குழைகள் தரித்து, கழுத்தில் சரப்பளி அலங்கரிக்க, இடது தோளிலிருந்து மார்புக்கு குறுக்கே ஓடும் பூணூல் கீழ்வயிற்றை அடைந்து வலது மேற்கையின் உட்புறத்தில் ஏற, நடுவயிற்றில் எளிய உதரக்கச்சை அணிந்து, தோள்களில் கேயூரமும், முன்கையில் வளைகளும் பூண்டு, இடையிலிருந்து மேல்தொடைவரை ஆடை தரித்து கணுக்காலில் கழல் அணிந்து காணப்படுகிறது.

நாகனின் சிற்பம் மெலிந்த உடல் அமைப்பும், அளவான அங்கங்களும், முறையாகப்பெற்று விளங்குகிறது. இவ்வுருவம் இடது காலை மடித்து, வலது காலைப் பக்கவாட்டில் தொங்க விட்டு, செவ்வக வடிவான இருக்கையின்மீது அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. நாகனின் இரு கைகளில் வலக்கை உடைந்தும், இடக்கை இடது தொடையின்மீதும் அமைந்துள்ளது. வலது கை அபய முத்திரையில் அமைந்திருக்க வேண்டும் என்பதைச் சிதைந்த கையின் அமைப்பைக்கொண்டு நன்கு அறியலாம்.

இவ்வுருவம் அணிந்துள்ள அணிகலன்கள் குறிப்பிடத்தக்கவை. காதிலுள்ள மகரக்குழை வேலைப்பாடுகளுடன்

வலுவாக அமைந்தும், கழுத்திலுள்ள அகன்ற சரப்பளி நுட்ப மான வேலைப்பாடுகொண்டும், கற்களைப் பதித்ததை ஒத்த நிலையிலும் காணப்படுகிறது. நாகனின் இடது மார்பில் ஓடும் பூணூல் பிரம்ம முடிச்சுகளுடன் காட்டப்பட்டுள்ளது. மேற் கையை அணி செய்யும் கேயூரம் இலைகருக்கணி முகப்புடையது. முன்கைவளை உருண்டையாக அமைந்துள்ளது. இடையில் முன்புறமுள்ள இடைக்கச்சு முடிச்சுக்களுடனும், கீழாடை உடலை ஒட்டியும் அமைந்துள்ளன. இவ்வாடை அணிகலன் களின் அமைப்பும், நாகனின் முகப்பொலிவும், அளவான அங்க அமைப்பும் கொண்டு இதனை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச் சோழர் கலையாகக் கருதலாம். நாகன் தலையின் பின்புறத்திலுள்ள அரவத்தின் விரிந்த மகுடம் மிகவும் இயற்கையாகச் செதுக்கப்பட்டுள்ளது. திருமேற்றளியில் கண்டெடுக்கப்பட்ட நாகராசரின் சிற்ப வடிவம் திருமணஞ்சேரி உத்வகணேசுவரர் ஆலயத்திலுள்ள நாகராசரின் சிற்பத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது. சோழர் காலத்தைச் சேர்ந்த இச்சிற் பத்தில் பல்லவர் கலைப்பாணி ஊடுருவி இருப்பதைக் கண்டு களிக்கலாம். இச்சிற்பம் அர்த்த மண்டப தேவகோட்டத்தின் வடதிசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

**ஆடல் அணங்கு 57x58x35 செ.மீ.**
*திருச்சின்னம்பூண்டி, தஞ்சை மாவட்டம்*

தஞ்சை மாவட்டம் கொள்ளிடத்தின் தென்கரையிலுள்ள கோவிலடிக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது திருச்சின்னம்பூண்டி. திருச்சடைமுடியுடைய மகாதேவர் ஆலயத் திருச்சுற்றைச் சுற்றி சில சிறு சிற்பங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று இவ்வுருவம். இரு இசைக் கலைஞர்களுக்கு நடுவே நாட்டிய மகள் ஒயிலாகத் தோன்றி நடமிடுகிறாள். கைவழி நயனம் செல்லக், கண் வழி மனமும் செல்ல ஆடல் அணங்கு ஆடுவதாகச் சிற்பம் அமைகிறது.

இந்த அழகிய சிற்பப் படைப்பைச் சோழ நாட்டுச் சிற்பியின் கற்பனை ஊற்று, சிற்றுளி ஆற்றலின் அற்புதம் என்றே கூறவேண்டும்.

அழகிய ஆடுமகளின் இடப்புறம் ஒருவன் மத்தளம் வாசிக்கிறான். இடப்புறம் ஒருத்தி கைத்தாளம் ஏந்தி இசைக்கிறாள். இவ்விரு கலைஞர்களின் இசைக்கேற்ப ஆடுமகள் ஆடுகிறாள். அவளது மெல்லிய இடையிலிருந்து வெளிப்படும் கால்கள் எவ்வளவு மென்மையாக வளைந்து வனப்பூட்டுகின்றன. அவள் முகம் மட்டும் அழிந்துள்ளது. ஆடும் மகளின் பெருமிதமான முகத்தோற்றத்தைக் காணமுடியாதவாறு சிற்பத் தடயங்கள் சிதைந்துள்ளன. இருப்பினும் கழுத்திற்கும், காலிற்கும் நடுவேயுள்ள உருவம் மட்டும் எஞ்சியுள்ளது. அவளது இடக்கை குவிந்து முத்திரை காட்டுகிறது. அவளது வலக்கை தாழ் கையாக வனப்புடன் வீழ்ந்துள்ளது. கடக முத்திரை காட்டும் உள்ளங்கையின் அழகும், கை விரல்களைக் காட்ட நுட்பமாகச் செதுக்கியுள்ள சிற்பியின் திறனும் பாராட்டுதற்குரியது. அவளது மார்பின் இடப்புறம் உள்ள உருண்டுதிரண்ட இளந்தனத்தின் அழகு, சிதைந்த வலப்பாகத்திற்கு ஈடு செய்கின்றது.

தலையின் வலப்பாகத்தே சரிந்த கொண்டையும் கழுத்தின் கீழ் ஆரமும், அழகிய கல் பதித்ததையொத்த தொங்கும் பொற்பூ மாலையும், தனங்களின் இடையே ஆறாக ஓடும் மெல்லிய சன்ன வீரமும், கை வளையல்களும், இடையில் தரங்கம் நிறைந்த பட்டாடையும், மெல்லிய ஒட்டியாணமும் அழகு செய்கின்றன.

இப்பெண்ணின் அளவான அங்கங்களும், பருவ எழிலும், முகப் பொலிவும், மெல்லிய இடையும் பெண்மையின் பேரழகைப் பறைசாற்றுவன.

கைத்தாளம் ஏந்தி நிற்கும் இளம் பெண்ணின் முகத்தில் கூட எவ்வளவு எழில் சிந்துகிறது. அவளது கைகளில் கூட எவ்வளவு மென்மை வெளிப்படுகிறது.

மத்தளம் ஏந்தி நிற்கும் கலைஞனின் வலக்கை வெளிப்பட்டுள்ள பாங்கு அவ்விசையின் ஓசையை அல்லவா நம் காதுக்ளில் ஒலிக்கச் செய்கிறது. இவ்வாறு நுட்பமாகக் கையைக் காட்டியுள்ள சோழர் காலச் சிற்பியின் திறன் அளவிடமுடியாத சிகரமாய்ப் பளிச்சிடுகிறது.

காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. பராந்தகச் சோழன் காலத்துக் கலை.

**அடியார்-1** 56x30 செ.மீ.
*திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்*

திருப்பராய்த்துறையிலிருந்து இரண்டு அடியார்களின் சிற்பங்கள் கொண்டுவரப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளன. ஒன்று வலது கையைத் தொடைமீது கொண்டு இடது கையால் மலர்பற்றி நின்ற கோலத்தில் காணப்படுகிறது. கரண்ட மகுடம், மகரக் குழை, கண்டிகை, கல் பதித்த மாலை, புரிநூல், வளை ஆகியன அலங்கரிக்கின்றன. இடையிலிருந்து மேல் தொடை வரை ஆடை கட்டப்பட்டுள்ளது.

**அடியார்-2** 55x28 செ.மீ.
*திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்*

இந்தச் சிற்பம் இடது கையைத் தொடைமீது கொண்டு வலது கையை மேல் தூக்கி அர்ச்சிக்கும் நிலையில் காணப் படுகிறது. நிற்கும் நிலையும், முறுவலிக்கும் உதடுகளும் கொண்டு விளங்கும் இச்சிற்பம் முற்காலச் சோழர் காலத்து அடியாரின் உருவங்களில் சிறந்து விளங்குகிறது. காலம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு. இவை முற்காலச் சோழர் காலக் கோயிலின் விமானச் சிற்பங்களாக இருந்தல் வேண்டும்.

**தவ்வை (ஜேஷ்டா)** 90x67.5 செ.மீ.
*திருமேற்றளிகை, தஞ்சாவூர் மாவட்டம்*

நீண்ட இருக்கையின் மீது இரு கால்களையும் அகட்டி கீழே தளரத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. தவ்வையின் வலது கை மலர்ந்த தாமரை மலரைப் பிடித்துள் ளது. இடது கை மாந்தியின் தொடைமீது அமைந்துள்ளது. கரண்ட மகுடம், உருண்டையான மாலை தலையிலும், நெற்றி யின் மேலும், மகரக் குழை செவியிலும், கண்டிகையும் சரப் பளியும் கழுத்திலும், மலர் பதித்த கேயூரம் மேற்கையிலும், கல்லாலும், மணியாலும், பொன்னாலும் அலங்கரிக்கப்பட்ட மூன்று வளைகள் முன் கையிலும், மூன்று பிரிவாகப் பிரிந்து வனப்பூட்டும் சன்ன வீரம் மேல் வயிற்றிலும், உடலை ஒட்டி அணி செய்யப்பட்ட ஆடை இடையிலும், பாதசரம் காலிலும்

அலங்கரிக்கின்றன. நீண்டு குவிந்த முகமும், எடுப்பான புருவமும், கீழ் நோக்கிப் புன்னகைக்கும் பார்வையும், குவிந்து வனப்பூட்டும் உதடுகளும், அளவான அங்கமும், தட்டையாகப் பருத்த தனமும், சற்று பெருத்த வயிறும் கொண்டு இளமைக் கோலத்துடன் விளங்குகிறது.

தவ்வையினுடைய வலது தோளின் மேற்புறத்தில் கழுதை உருவம் சக்கரத்துடன் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது. தவ்வையின் வாகனமான கழுதை சக்கரத்துடன் விரைந்து செல்கிறது. நான்கு கால்களின் அசைவுகளிலும் அதன் வேகம் நன்கு வெளிப்படுகிறது. சோழ நாட்டுச் சிற்பங்களில் இங்கு தான் முதன்முதலில் தவ்வையின் வாகனமான கழுதையின் உருவத்தைக் காண்கிறோம்.

தவ்வையின் வலப் புறத்தில் மாட்டுத் தலையும், கையிலே நீண்ட கதையும் கொண்ட குளிகனின் உருவம் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. மாட்டுத் தலையும் மனித உடலும் கொண்டது இவ்வுருவம்.

தவ்வையின் இடப்புறத்தில் மாந்தி எனும் மங்கை அமர்ந்த கோலத்தில் எழிலுருவாய்க் காணப்படுகிறாள். குளிகனும் மாந்தியும் கால்களைக் குத்திட்டு ஒரு காலை மட்டும் தொங்க விட்டு அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ள பாங்கு சிற்பியின் ஆற்றலுக்கு அளவுகோலாக அமைந்துள்ளது. கிடைத்துள்ள கல்லைக் கொண்டு சிற்பி முறையாகச் சிற்பத்தைச் செதுக்கி யுள்ள திறன் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வுருவம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலையாகக் கருதப் படுகிறது. இச் சிலை முந்திய சோழர் காலச் சிற்பத்திற்குச் சீரிய எடுத்துக்காட்டாக இலங்குகிறது.

**வடவாயில் செல்வி** *88x56செ.மீ.*

*பழையாறை, தஞ்சை மாவட்டம்*

இவ்வுருவம் நீண்ட செவ்வக வடிவான பீடத்தின் மீது வலது காலைக் குத்திட்டு ஊன்றி இடது காலைப் பீடத்தின் கீழ் குறுக்கே தொங்கவிட்டு எண்கரங்களில் ஆயுதம் தாங்கி முகத்தில் வீரச்சுவை பொலிய விளங்குகிறது.

சதுரமான பருத்த முகமும், விரிந்த நுதலும், தூக்கிய புருவமும், புடைத்த நாசியும், வீரப்பார்வையும், தடித்த உதடுகளின் பக்கங்களில் நீண்டுள்ள கடைவாய்ப் பற்களும் இவ் உருவத்தின் உணர்வுகளை நன்கு வெளிப்படுத்தும் கருவியாக அமைந்து விளங்குகிறது.

கொடிய ஆயுதங்கள் பற்றிய எண்தோள்களின் வேகம் சிற்பத்தின் ஒவ்வொரு அசைவிலும் காணப்படுகிறது. தேவி இருக்கையில் வீறுகொண்டு அமர்ந்துள்ள நிலையும், வலுவான அங்கங்களின் அமைப்பும், வீரம் செறிந்தமுகப் பொலிவும், எடுப்பான தோற்றமும், ஆடை அணிகலன்கள், ஆயுதங்கள் ஆகிய அமைப்புக்களைக்கொண்டு இதனை முற் காலச் சோழர் கலைப் படைப்பாகக் கருதலாம். வழக்கமாக தேவியின் இடது காலின் கீழ்க் காட்டப்படும் அசுரனின் உருவம் இங்கு காணப்படவில்லை. வனப்பும், வரலாறும் மிக்க இவ் உருவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழ மன்னர்களின் இரண்டாம் தலைநகரான பழையாறையிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சோழ வேந்தர்களின் வெற்றித் தெய்வமாகவும், பழையாறை மக்களின் பெருந்தெய்வ மாகவும் விளங்கியிருக்கவேண்டும். இவ்வுருவம் தஞ்சையில் விசயாலயன் எடுத்த நிசும்பசூதனியின் வகையைச் சார்ந்தது. பழுவேட்டரையர் எடுப்பித்த காளியின் சிற்பத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது.

**சண்டேச்சுரர்** *70x33.5 செ.மீ.*
*திருவாலம்பொழில், தஞ்சாவூர் மாவட்டம*

தமிழ்நாட்டுச் சைவக் கோயில்களில் திருச்சுற்று வடகிழக்குப் பகுதியில் சண்டேச்சுரருக்கு எடுக்கப்பட்ட பரிவார ஆலயத்தைக் காணலாம். இவ்வாலய வாயில் தென்திசை நோக்கி அமைந்திருக்கும். வலது கையில் மழுவைப்பற்றி இரண்டு கைகளுடன் அமர்ந்தகோலத்தில் சண்டியின் உருவம் அமைந் திருக்கும். சிற்பங்களிலும், படிமங்களிலும் இவ்வுருவத்தை வடித்துள்ளனர். ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் உலாவாக எடுத்துச் செல்லும் உற்சவத் திருமேனிகளில் சண்டியின் உருவம் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இவை

நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் அமர்ந்த கோலத்திலும் காணப்படுகின்றது. சோழர்காலப் பரிவார ஆலயங்களில் இடம்பெற்ற சண்டீச்சுரரின் உருவத்தை இங்கு காணலாம்.

சதுரமான பரந்த முகமும், விரிந்த நுதலும், கோடிட்ட புருவமும், அமைதியாகப் பார்வையைச் செலுத்தும் அரைக் கண்களும், அகன்ற நாசியும், முறுவலிக்கும் தடித்த உதடுகளும், விரிந்த மார்பும், அளவான அங்கங்களும் பெற்று இவ்வுருவம் விளங்குகிறது. சண்டீச்சுரரின் வலது கை மழுவைப் பிடித்தும், இடது கை தொடைமீது அமைந்தும் காணப்படுகிறது. காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. சோழர் கலை.

**உமை தழுவிய சடைமுடி அண்ணல்** *131x76 செ.மீ.*
*கோபுரப்பட்டி, திருச்சி மாவட்டம்*

நான்கு கைகளும், மேலிரு கைகளில் மழுவும், மானும் தாங்கி, கீழ் வலக்கையைத் தொடையில் அமர்த்தி, இடது கையால் உமையன்னையைத் தழுவி நிற்கும் நிலையில் இந்நீள் சடைமுடி அண்ணலின் உருவம் காணப்படுகிறது.

அருகில் தேவி அழகே உருவாகக் காட்டப்பட்டுள்ளாள். அவளது வலது கை மலரைப் பிடிக்கும் முத்திரையிலும், இடது கை தாழ் கையாக எழிலாகத் தொங்கியும் காணப்படுகின்றன. அண்ணலின் அணைப்பிலே தன்னை மறந்து அழகிய சிலையாக நிற்கிறாள்.

திரிபங்கத்தில் நிற்கும் உமையின் உடல் அமைப்பு, கவிழ்ந்து ஒடுங்கிய முகப்பொலிவு, மெய்மறந்து மூடிய அரைக் கண்கள், அழகிய நாசி, தெய்வீகம் தவழும் மென்மையான உதடுகள் யாவும் நீள்முடி அண்ணலின் பேரழகுக்கு ஈடு செய்கின்றன.

கல்லிருக்கும் இடமெல்லாம் கலைகளாக்கிக் கடவுளர்தம் திருவுருவைப் படைத்த தமிழ் மன்னர்களின் புகழ் படைத்த சிற்பங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது பல்லவர் கலையிலிருந்து சோழர்கலை தொடங்கிய மாறுதல் காலத்திற்குரிய அரிய சிற்பமாகும். இதன் காலம் கி. பி. 8-9-ஆம் நூற்றாண்டு.

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகச் சேகரிப்பிலிருந்த இவ்வுருவம் 1982-ல் லண்டனில் நடந்த கலை விழாவில் இடம் பெற்றுத் திரும்பிய புகழ் படைத்த சிற்பமாகும்.

**பன்றி முகத்தாள் - வராகி** *78x44 செ.மீ.*
*சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டம்*

பன்றியின் முகமும், மானிட உடலும்கொண்டு விளங்குவது இவ்வுருவம். ஏனத்தின் உருவில் இயற்கையாகச் செதுக்கப் பட்டுள்ள முகம் மிகவும் பொலிவோடு விளங்குகிறது. சோழபுரம் சிவன் கோயிலுக்குரிய பரிவார ஆலயக் கன்னியர் எழுவருள் ஒருத்தியாக இவ்வுருவம் கருதப்படுகிறது. காலம் கி.பி. 10—11-ஆம் நூற்றாண்டு. சோழர் கலை.

## அகத்தியர்

தமிழ்நாட்டில் தமிழ் முனிவர் அகத்தியர் பெயரால் ஊர்களும், கோயில்களும் அமைந்துள்ளன. அகத்திய முனிவரைத் தொடர்புபடுத்திப் புராண வரலாறுகள் பல கோயில்களில் கூறப்படுகின்றன. சகல சாத்திரங்களுக்கும் முதலாசிரியர் அகத்திய முனிவர் எனக் கூறும் மரபு உள்ளது. அவர் பெயரால் சிற்பம், வைத்தியம், இரசவாதம், மாந்தரீகம் முதலிய துறைகளில் பல நூல்கள் வடமொழி, தென்மொழிகளில் காணப்படுகின்றன. இவையன்றி அகத்திய பக்தவிலாசம் என்றும், அகத்தியர் தேவாரத்திரட்டு என்றும் இருநூல்கள் உண்டு. அகத்தியரைத் தெய்வத் தொடர்புடையவராகவும், எல்லா வகையான செயல்களுக்கும் தலைவராகவும் கொள்ளும் மரபு தமிழ் நாட்டிலும் தமிழர்கள் குடியேறியுள்ள ஜாவா, போர்னியோ, கம்போடியா முதலிய இடங்களிலும் உள்ளன. ஜாவாவில் தென்னிந்தியச் சிற்ப அமைதிகள் யாவும் பொருந்திய அகத்தியரின் சிற்பம் ஒன்று நின்ற நிலையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தொல்காப்பியர், அகத்தியரது மாணாக்கருள் முதன்மை யானவர் எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். தென்னாட்டில் சிற்ப நூல் செய்தவர் அகத்தியர் என்ற கருத்து உள்ளது. இவர் சகலாதிகாரம் என்ற நூலை இயற்றியதாகக் கூறுவர்.

முற்காலச் சோழர்காலக் கோயில்களில் இவ்வுருவம் அர்த்த மண்டப மாடங்களில் அமைக்கப்பட்டது. எடுத்துக் காட்டாகத் தஞ்சை மாவட்டம், புஞ்செய் நல்துணை ஈச்சுரம் கோயிலிலுள்ள அகத்தியர் சிற்பத்தைக் கூறலாம். இங்கு அகத்தியரின் முடியில் நீண்ட சடை மகுடமும், கழுத்தில் அக்கமாலையும், மேல்உடலில் அங்கியும், இடையில் ஆடையும் அணி செய்கின்றன. தலையின் பக்கங்களில் பறக்கும் இரு கந்தர்வர்கள் காட்டப்பட்டுள்ளனர். முற்காலச் சோழர் கால அகத்தியர் சிற்பங்களுக்கு இது ஒரு சிறந்த சான்றாக அமை கிறது.

திருவாவடுதுறை, காமரசவல்லி, கருந்தட்டாங்குடி, ஆனாங் கூர், திருவாரூர், திருப்புகலூர் ஆகிய ஊர்க் கோயில்களின் அர்த்த மண்டப மாடங்களில் அருமையான வேலைப்பாடுகளுடைய அகத்தியர் சிற்பங்களைக் காணலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் சற்று அழகிலும், அமைப்பிலும் வேறுபட்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

திருவாவடுதுறை மாசிலாமணீச்சுரர் கோயில் அகத்தியர் தாமரை இருக்கையில் காணப்படுகிறார். வலது கை வழக்க மாக அக்கமாலையைப் பற்றி உள்ளது. இடது கை ஏடு ஏந்தி யுள்ளது. இடது தோளுக்குமேல் கெண்டி காட்டப்பட்டுள்ளது. சடைமுடியில் இரு பக்கங்களிலும் சாமரை காட்டப்பட்டுள்ளது.

காமரசவல்லி கார்க்கோடகேச்சுரர் கோயில் அகத்தியரின் அடிவயிற்றில் பட்டிகை ஒத்த கச்சை கட்டப்பட்டுள்ளது.

கருந்தட்டாங்குடி வசிட்டேசுவரர் கோயில், ஆனாங்கூர் அகத்தீசுவரர் கோயில், அகத்தியர் உருவங்களில் இடது கையில் கெண்டிகை உள்ளது. ஆனாங்கூர் அகத்தியர் உருவம், வலது

காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்டுக் காணப்படு கிறது. திருவாரூர் அசலேசுவரர் கோயில் அகத்தியர் தலை மீது கவிழ்ந்த குடை காணப்படுகிறது. முற்காலச் சோழர் காலத்து அகத்தியர் சிற்பங்கள் யாவும் முதுமையும், அழகும் தவழ விளங்குகின்றன.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் குடை வரைக் கோயில்களில் ஒன்றான திருக்கோலக்குடியில் அகத்தியர், புலத்தியர் ஆகிய உருவங்கள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

முற்காலச் சோழர்களைத் தொடர்ந்து இடைக்காலச் சோழர்களும் அகத்தியர் சிற்பங்களைத் தோற்றுவித்துள்ளனர். ஆனால் இவை எண்ணிக்கையில் குறைவே. பிற்காலச்சோழர் காலத்தில் அகத்தியரைத் தேவகோட்ட மாடங்கள் அன்றிக் கோபுர மாடங்களிலும் காணலாம். சிதம்பரம் கோயிலிலுள்ள கோபுரத்தின் கீழ்த்தளங்களில் அகத்தியரின் அழகிய உருவம் ஒன்று காணப்படுகின்றது. அகத்தியரின் இரு பக்கங்களிலும் இரு சிறு முனிவர்கள் போற்றுகின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

சீர்காழி பிரம்மபுரீசுவரர் கோயில் கோட்டத்தில் நின்ற நிலையிலுள்ள அகத்தியரின் உருவத்தைக் காணலாம். அக்க மாலையும், கெண்டியும் பற்றிய நிலையில் இரு கைகள் காட்டப்பட்டுள்ளன. திருச்சக்திமுற்றம் கோயிலில் இருந்த கோலத்தில் அகத்தியர் உருவம் காட்டப்பட்டுள்ளது. இங்குள்ள அகத்தியர் முகத்தில் தெய்வீக அமைதி தவழ்வதைக் காணலாம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை சோழர்காலச் சிற்பப் படைப்புகளில் அகத்தியர் சிற்பம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதை அறியலாம். ஆனால் இதுகாறும் அகத்தியரின் செப்புத் திருமேனிகள் ஏதும் கிடைத்தில.

இங்கு திருவலஞ்சுழி சிவன் கோயில் நந்தவனத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அகத்தியர் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. இது இங்குள்ள முற்காலச் சோழர் கோயில் ஒன்றின் மாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

**அகத்தியர்** *102x46 செ.மீ.*
*திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்*

செவ்வக வடிவான இருக்கையின் மீது இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு இரண்டு கைகளுடன் அமர்ந்தகோலத்தில் காணப்படுகிறது. வலது முன்கை உடைந்துள்ளது. இச்சிற்பத்தின் அமர்ந்த கோலம், முகப்பொலிவு, முடி அமைப்பு, கையில் ஏந்தியுள்ள கெண்டியின் அமைப்பு, ஆடை, அணிகள் யாவும் தஞ்சை மாவட்டம் புஞ்சை நல்துணை ஈசுவரமுடையார் கோயில் அகத்தியரை ஒத்து விளங்குகிறது. இளமஞ்சள் நிறக் கல்லைக்கொண்டு செதுக்கப்பட்டுள்ள இவ் உருவம் கால வெள்ளத்தில் சிதைந்தும், மழுங்கியும், பொறிந்தும் காணப்படுகிறது. காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. சோழர் கலை.

# சேத்திரபாலர்

சேத்திரபாலர் சிவபெருமானுடைய பல்வேறு வடிவங்களில் ஒன்றாகும். அவரைப்பற்றி இலக்கியங்களும், நிகண்டுகளும் குறிப்பிடுகின்றன. இவர் ஊரையும் மக்களையும் காக்கும் கடவுளாகக் கருதப்படுகிறார். பொதுவாக இவருடைய கோயில் ஊரின் வடகிழக்கு மூலையில் இருக்கும்.

சோழர் காலத்தில் சேத்திரபாலர் முதலில் பரிவார தேவதைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இராசராசசோழன் காலத்தில்தான் அவருக்குத் தனிக்கோயில் எடுக்கப்பட்டது. இம்மன்னன் காலத்தில் பொதுவாக இச்சேத்திரபாலர் வழிபாடு சிறந்திருந்ததைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு $72\frac{1}{2}$ கழஞ்சு எடையுள்ள தங்கத்தினாலான சேத்திரபாலர் திருமேனியைச் செய்தளித்தான். இவன் காலத்தில் எடுக்கப்பட்ட எழில் வாய்ந்த சேத்திரபாலர் உருவத்தை இன்றும் அக்கோயில் முன்பு காணலாம். மேலும் இவனுடைய அதிகாரி ஆதித்தன் சூரியன் என்ற தென்னவன் மூவேந்தவேளான் சேத்திரபால தேவர்க்குத் திருமேனி ஒன்று செய்தளித்தான். இம்மன்னனின்

26-ஆம் ஆட்சியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கங்கைகொண்டானில் ஸ்ரீகைலாயத்து சேத்திரபாலர் வழிபாட்டிற்காக நிலம் தானமாக அளிக்கப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் சீதபெட்டா என்ற இடத்தில் உள்ள பைரவர் கோயிலில் குலோத்துங்கன் காலத்தில் வீரசோழ பிரம்மராயன் என்பவன் சேத்திரபாலர் பீடத்தைத் திருப்பணி செய்தான். கோனேரிராசபுரத்தில் இராசேந்திரன் தேவி, அரிஞ்சயன் மாதேவி சேத்திரபாலர் திருமேனியை நிறுவினாள்.

விக்கிரமசோழன் தான் எடுப்பித்த சிதம்பரம் மேற்குக் கோபுரத்தின் கீழ்த்தளக் கோட்டங்களில் சேத்திரபாலரின் உருவம் காணப்படுகிறது. இச்சிற்பத்திற்கு மேல் 'சேத்திர பாலப்பிள்ளையார்' எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

தாராசுரத்தில் இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்ட முன்கோபுரத்தின் கோட்டத்திலும் சேத்திரபாலப்பிள்ளையார் என்ற கல்வெட்டு காணப்படுகிறது. தற்போது அச்சிற்பம் அங்கு இல்லை.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசாதிராசதேவன் 12-ஆம் ஆட்சி ஆண்டில் வந்தவாசி வட்டம் கொடுங்களூர் அகத்தீசுவரம் உடையார் கோயில் சேத்திரபால பிள்ளையார்க்கு வழிபாட்டிற் காக நிலம் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கனின் 23-ஆம் ஆட்சியாண்டின் புதுக்கோட்டை வட்டம் நீர்பழனி வளர்மதீசுவரர் கோயிலில் சேத்திரபாலர் திருமேனி அமைக்கப்பட்டது. இதே மன்னன் காலத்தில் திருமணஞ்சேரி (ஆலங்குடி) கோயிலில் தில்லை வனமுடையார் என்ற நடனப்பெண் அக்கோயிலில் தன்னால் செய்தளிக்கப்பட்ட சேத்திரபாலப்பிள்ளையாரின் வழிபாட்டிற் கும், விளக்குக்கும் தானம் அளித்தான் என்பதை அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.

மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகளிலிருந்து சோழர் காலத்தில் சேத்திரபாலர் வழிபாடு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்ததை அறியலாம்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் எடுக்கப்பட்ட சேத்திரபால பிள்ளையார் பற்றிக் குன்றக்குடி கல்வெட்டு குறிக்கிறது. கல்வெட்டு குறிக்கும் சேத்திரபால பிள்ளையாரைக் குன்றக்குடிக் குடைவரைக் கோயில் முன்பு இன்றும் காணலாம். விசயநகரர் காலத்துக் கல்வெட்டுக்கள் சில சேத்திரபாலருக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. தொடர்ந்து மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்திலும் இவ்வழிபாடு மேலோங்கி இருந்ததை ஏராளமான சிற்பச் சான்றுகளால் உணரலாம்.

**திருவலஞ்சுழி சேத்திரபாலர்** *163x70 செ.மீ.*
*திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்*

இச்சிற்பம் சிவன்கோயில் தென்கிழக்கு மூலையிலுள்ள சேத்திரபால தேவர் கோயிலுள்ள கருவறையிலிருந்து கொண்டு வரப்பட்டது. இது முகத்தில் புன்னகை தவழ எழிலுருவாய் எண்தோள்களில் ஆயுதம் தாங்கி எடுப்பான தோற்றத்துடன் நின்ற நிலையில் காணப்படுகிறது. வலது கைகளில் கீழிருந்து மேலாக நீண்ட திரிசூலம், நீள்வாள், பாசம், சூலத்தண்டை ஒத்த அம்பு ஆகிய ஆயுதங்கள் பற்றிய நிலையில் காணப்படுகிறது. இக்கைகளில் திரிசூலம் பற்றிய முன்கை உடைந்துள்ளது. இடது கை கீழிருந்து மேலாக முறையே மணி, உடுக்கை, வில் ஆகிய ஆயுதங்களைப் பற்றியுள்ளன. இடது முன்கை ஒன்று உடைந்துள்ளது. இக்கை கபாலம் பற்றிய நிலையில் இருந்திருக்க வேண்டும். தலையின் பின்புறம் விரிந்த சுடர் முடி வனப்பூட்டுகிறது. இம்முடியின் மேல் இடப்புறம் பிறை காட்டப்பட்டுள்ளது. முடி நடுவே கபாலம் ஒன்றும், அதன்கீழ் ஆடும் அரவங்கள் இரண்டு இணைந்து, பக்கங்கள் காட்டப்பட்டும் விளங்குகிறது. நெற்றியைச் சுற்றிலும் வட்ட வடிவமான நெற்றிப்பட்டம் வனப்பூட்டுகிறது.

நீண்ட வலது காதில் மகரக்குழையும், இடது காதில் வட்டமான தகட்டுக்குழையும் அலங்கரிக்கின்றன. தோள்களில் தோள்மாலை சரிந்துள்ளது. கழுத்தைச் சுற்றிலும் மெல்லிய கண்டியும், நீண்ட முத்தாரம் ஒன்றும் அணி செய்கின்றன. கழுத்தணியின் குஞ்சம் வலது தோளின் முன்புறம்

வனப்புடன் வீழ்ந்துள்ளது. மேற்கைகளில் உரக கங்கணங்கள் காட்டப்பட்டுள்ளன. இடது தோளிலிருந்து வலது கீழ்த் தொடைவரை கபால மாலை அலங்கரிக்கின்றது. உடைமணி மாலை, அழகிய மலர்ச்சரத்தை ஒத்து அடுக்கடுக்காக அமைந்து காணப்படுகிறது.

வட்ட வடிவான முகமும், நெளிந்த புருவமும், கீழ்நோக்கிச் செலுத்தும் ஒளிமிக்க பார்வையின் வீச்சும், எடுப்பான நாசியும், பிரிந்த உதடுகளில் தவழும் புன்னகையும், இதழ்களின் ஓரங்களில் வெளிப்பட்டுள்ள சிறிய கோரைப் பற்களும் சேத்திர பாலரின் முகப்பொலிவை மிகவும் மென்மையாக வெளிப்படுத்துகிறது.

இவ்வுருவத்தின் நிற்கும் நிலை, நீண்ட உடல்வாகு, படர்ந்த சுடர்முடி, புன்னகை சிந்தும் முகப்பொலிவு, பிரிந்த தோள், அகன்ற மார்பு, குறுகிய இடை, வலிமையான அங்கங்கள், ஆடையற்ற திருவுருவாய் நிற்கும் எழிற்கோலம் யாவும் சிற்ப அளவுகளுக்கேற்ப முறையாக வடிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

சோழ மன்னன் முதலாம் இராசராசனின் பட்டத்தரசி தந்தி சக்திவிடங்கியான உலகமாதேவியால் சேத்திரபாலருக்கு எடுக்கப்பட்டுள்ள தனிக்கோயில் என்பதைத் திருவலஞ்சுழிக் கல்வெட்டு கூறுகின்றது.

". . . . இராசராசதேவர் மகாதேவியார் தந்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீ ஓலோக மாதேவியார் உய்யக் கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குட மூக்கின்பால் திருவலஞ்சுழியில் நாம் எடுப்பித்த இத்திருக்கற்றளி பிள்ளையார் சேத்திர பாலதேவர்க்கு . . . . ." என வருகிறது. எனவே இச்சிற்பம் உலகமாதேவி காலத்தது என்பதை அறியலாம். தஞ்சை பெரிய கோயிலிலுள்ள இராசராசன் எடுப்பித்த சேத்திர பாலரைப் போன்றே அவன் தேவி எடுப்பித்த சிற்பமும் சிறப்புடையது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இவ்வுருவம் விளங்குகிறது.

திருவலஞ்சுழி சேத்திரபாலருக்கும், கணபதிக்கும் இராசராசன் 540 கலன் நெல் தானமாக அளித்திருக்கின்றான். இக்கோயிலுக்கு உலகமாதேவியாரும், குந்தவையாரும், நடுவிற் பிள்ளையாகிய மாதேவி அடிகளும் பல அணிகலன்களைத் தானமாகக் கொடுத்துள்ளனர்.

**நந்தி** *88x75 செ.மீ.*

*செந்தலை, தஞ்சாவூர் மாவட்டம்*

குறுங்கொம்பும், எடுப்பான முகமும், பிறை வடிவான நாசியும், பக்கங்களில் விரிந்த காதும், பெருத்த திமிலும், சரிந்த தாடியும், உறுதிபடைத்த முன் விலாவும் கொண்டு விளங்குகிறது. நான்கு கால்களை மடித்து அமர்ந்த நிலையில் நந்தியின் உருவம் காணப்படுகிறது. இதன் வால் பின் கால்களினிடையே செருகப்பட்டுள்ளது. அரசிலை வடிவில் அமைந்த நெற்றிப் பட்டமும், சலங்கையும், ஒலிக்கும் மணியும் பொருந்திய கழுத்து வாரும் இங்கு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. நந்தியின் முன்கால், முன்விலா, திமில் ஓரே வீச்சில் சிற்பி செதுக்கியுள்ள திறன் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நந்தி முதலாம் ஆதித்த சோழர் காலத்தியது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்நந்தி செந்தலைச்சிவன் கோயில் திருச்சுற்று மாளிகையிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

**சிம்மத்தூண்** *165x60 செ.மீ.*

*செந்தலை, தஞ்சாவூர் மாவட்டம்*

தாமரை இருக்கையின்மீது முன் இரு கால்களைக் கூரிய நகங்களால் பற்றி, பின் இரு கால்களை மடித்து அமர்ந்த கோலத்தில் சீறும் சிம்மத்தின் உருவம் அமைந்துள்ளது. சிம்மத்தின் தலைமீது தூணின் உடல் பகுதி செங்குத்தாக அமைந்துள்ளது.

சிம்மத்தின் தலைமீதுள்ள தூண் பகுதி, கலசம், அலங்காரமான இடைக்கட்டு, தொங்கும் தாமங்கள் நிறைந்த உடல், அடி ஆகிய பகுதிகளைக்கொண்டு பதினாறு பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

முற்காலச் சோழர் கலை. இச்சிம்மத் தூணில் பல்லவர்களின் கலைப் பாணி ஊடுருவியுள்ளதை நன்கு காணலாம். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

# படிமப் பிரிவு

**மாணிக்கவாசகர்** *55x24 செ.மீ.*
*கீழப்பூதனூர், தஞ்சாவூர் மாவட்டம்*

தாமரை இருக்கையின்மீது இரு கைகளுடன் நின்ற நிலை. வலது கை சிம்ம முத்திரையில் உள்ளது. இடது கை ஏடு ஏந்தியுள்ளது. அணியற்ற காதுகள், விரிந்து வனப்பூட்டும் தலைக்கோலம், கழுத்தில் மாலை, மார்பில் புரிநூல், அரையில் கௌபீனம் ஆகியவை அலங்கரிக்கின்றன. காலம் கி. பி. 12—13-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**காளி** *50x26 செ. மீ.*
*திருவெண்காடு, தஞ்சாவூர் மாவட்டம்*

இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு, நான்கு கைகளுடன், இருக்கையில் அமர்ந்த நிலையில் காணப் படுகிறாள். மேல் வலக்கையில் சூலம், இடக்கையில் அங்குசம், கீழ் வலக்கையில் அபயம், இடக்கையில் கபாலம், அழகிய அனல் மகுடம், பிரேத குண்டலம், வட்டமான ஓலைக்குழை, கண்டிகை, காரை, அரவம், அலங்கரிக்கும் மார்புக் கச்சை, கபால மாலை, கீழாடை, பாதசரம் ஆகியன அலங்கரிக்கின்றன. காளியின் உருவத்தில் அமைதி தவழுகிறது. காலம் கி.பி 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழர் கலை.

**பிள்ளையார்** *56x26 செ. மீ.*
*வேளாங்கண்ணி, தஞ்சாவூர் மாவட்டம்*

தாமரை இருக்கைமீது நான்கு கைகளுடன் நின்ற நிலை. மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை அக்க மாலையையும் பற்றியுள்ளன. கீழ் வலக்கை கடக முத்திரையிலும் இடக்கை மோதகத்தையும் ஏந்தியுள்ளது. எளிய மகுடம், கண்டமாலை கண்டிகை, சரப்பளி, புரிநூல், உதரக்கச்சை, தொடைவரை ஆடை, பாதசரம் ஆகியன அலங்கரிக்கின்றன. காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழர் கலை.

**சண்டீச்சுரர்** *57x17 செ.மீ.*
*சிறுகாட்டூர், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் இரு கைகளைக் கூப்பி நின்ற நிலையில் உள்ளது. இடது

தோள்மீது மழு, நீள்சடை மகுடம், மகரக்குழை, வட்டக்குழை, கண்டிகை, சரம், காரை, புரிநூல், தோள்வளை, கடகம், காப்பு, தொடை வரை ஆடை, பாதசரம் யாவும் அலங்கரிக்கின்றன. காலம் கி பி. 13-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**ஞானசம்பந்தர்** *56x28 செ.மீ.*
*முகுந்தனூர் தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் இடது காலை முன் வைத்து, வலது காலை ஊன்றி, இரு கைகளுடன் ஆடையின்றி இளம் பிள்ளையாக நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. இடது கை கிண்ணத்தையும், வலது கை விரல்களை பாவத்துடன் மேல்நோக்கிச் சுட்டும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. சதைப் பற்றுடன் இளம் பிள்ளையின் வடிவத்தில் இப்படிமம் வடிக்கப்பட்டுள்ளது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**உமை**
*திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் பீடத்தின் மீது உள்ள தாமரை இருக்கையில் திரிபங்கத்தில் இரு கைகளுடன் நின்ற நிலையில் வடிக்கப் பட்டுள்ளது. வலது கை கடக முத்திரையிலும், இடது கை தாழ் கையாகவும் உள்ளது.

நீண்ட உருவும், மெலிந்த அங்கமும், குனிந்த தலையும், அமைதி தவழும் முகப்பொலிவும் கொண்டு மிக இயற்கையாக வடிக்கப்பட்டுள்ளது. காலம் கி.பி. 11—12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**திருமகள்** *68x21 செ.மீ.*
*பெருந்தோட்டம், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் சதுரமான பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் இரண்டு கைகளுடன் உடலைத் திரிபங்கத்தில் வளைத்து நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இடது கை சிம்ம கரண முத்திரையிலும் வலது கை தாழ் கையாகவும் உள்ளது. இவ்வுருவம் நிற்கும் நிலை, முகப்பொலிவு

முடியமைப்பு, அங்கங்களின் அளவு, இடை அணிகலன்கள் ஆகியவற்றைக் கொண்டு முற்காலச் சோழர் படிமமாகக் கருதப் படுகிறது. காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

**நிலமகள்** *67x21 செ.மீ.*
*பெருந்தோட்டம், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் சதுரமான பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் உடலைத் திரிபங்கத்தில் வளைத்து வனப்புடன் நிற்கிறது. வலது கை கடக முத்திரை காட்டி, இடது கை தாழ்கையாக விளங்குகிறது. கரண்ட மகுடம் தலையிலும், மகரக் குழை காதிலும், ஆரம், கண்டிகை, காரை, சரடு ஆகிய அணிகள் கழுத்திலும், தோள்மாலை மேல் தோளிலும், கேயூரம் மேல் கையிலும், கடகம் முழங்கையிலும், வளை முன் கையிலும், புரிநூல் மார்பிலும், மகரக் கச்சை இடையிலும், பாதசரம் காலிலும் அலங்கரிக்கின்றன. முற்காலச்சோழர் கலைப்பாணி. காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

**திருமால்** *87x33 செ.மீ.*
*பெருந்தோட்டம், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் சதுரமான பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் நான்கு கைகளுடன் நேராக நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. திருமாலின் மேல் வலக்கை ஆழியைச் சாய்வாகப் பிடித்தும், அவ்வாறே இடக்கை சங்கத்தைப் பிடித்தும் உள்ளன. செங்குத்தான கிரீட மகுடம், கையில் பற்றி யுள்ள ஆயுதங்கள், பளுவாக நீண்டு தொங்கும் ஆடை அணி கலன்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கது. முற்காலச் சோழர் கலைப் பாணி. காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

**சோமாஸ்கந்தர்** *51x61 செ.மீ.*
*நீடூர், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் நீண்ட இருக்கையின் மீது சிவனும், உமையும் இருந்த கோலத்திலும், இருவருக்கும் இடையே கந்தன் நின்ற கோலத்திலும் வடிக்கப்பட்டுள்ளது. சிவனின் மேற் கைகள் மழுவையும், மானையும் பற்றி, கீழ்க் கைகள் அபயத்திலும், சிம்ம கரண முத்திரையிலும் அமைந்துள்ளன. தலையில் கரண்ட

மகுடம் அணிந்த உமையின் வலது கை காக்கும் கையாகவும், இடதுகை அபயம் வழங்கும் கையாகவும் காட்டப்பட்டுள்ளன. அன்னைக்கும், அத்தனுக்கும் நடுவே உள்ள கந்தன், இளம் பிள்ளையாகக் காட்டப்பட்டுள்ளார். காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழர் கலை.

**தீர்த்தங்கரர்** *77x36 செ.மீ.*
*கிடங்கில், தென் ஆர்க்காடு மாவட்டம்*

இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் ஆடையற்ற நிலையில் இரு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. தலையில் குட்டையான சுருள்முடியும், அணியற்ற வடித்த காதும், விரிந்த மார்பும், திரண்ட தோளும் வனப்பான அங்கங்களும் பெற்று எளிமையாக விளங்குகிறது. பீடத்தின் இரு பக்கங்களிலும் திருவாசி பொருத்த இரு கொம்பும், அதன்கீழ் தாங்கி நிற்கும் சிம்மங்களும் காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**குதிரைச் சொக்கர்** *55x34 செ.மீ.*
*திருவாலங்காடு, தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் குதிரை மீது அமரும் நிலையில் இரு கால்களைப் பரப்பித் தொங்கவிட்டு இருந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. இடது கை குதிரையின் பிடிவாரைப் பற்றும் நிலையிலும், வலது கை மேலே உயர்த்தி ஓங்கும் நிலையிலும் அமைந்துள்ளது, பரந்த முகமும், தூக்கிய புருவமும், திறந்த கண்களும், எடுப்பான நாசியும், சற்றுத்திறந்த வாயும் பெற்றுக் கம்பீரமாக விளங்குகிறது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. பிந்திய சோழர் கலை.

**திருமங்கை ஆழ்வார்** *80x30 செ.மீ.*
*சீனிவாச நல்லூர், திருச்சி மாவட்டம்*

இப்படிமம் சதுரமான பீடத்தின் மீது தாமரை இருக்கையில் இரு கைகளுடன் நின்ற நிலையில் உள்ளது. வலது கை, இடது கைகள் முறையே வாளும், கேடயமும் பிடிக்கும் பாவனையிலுள்ளது. காலம் கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டு. விசயநகரர்.

**அப்பர்** *50.5x22 செ.மீ.*
*திருக்கோடிக்காவல், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் இரு கைகளைக் கூப்பி வணங்கிய நிலையில், உடலைச் சற்று இடப்புறமாகச் சாய்த்துத் தாமரை இருக்கையின்மீது நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இடது தோளின்மீது எளிய மழு சார்த்தப்பட்டுள்ளது. தலையைச் சுற்றி வட்டமாக அக்கமாலை காட்டப்பட்டுள்ளது. காதில் அணிகள் இல்லை. கழுத்திலும், கைகளிலும் எளிய அணிகள் அலங்கரிக்கின்றன. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**புத்தர்** *77x36 செ.மீ.*
*நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் நீள் சதுர பீடத்தின்மீது உள்ள தாமரை இருக்கையில் இரு கால்களை மடித்து அர்த்த பத்மாசனத்தில் தியான நிலையில் அமர்ந்துள்ளது. இரு கைகளையும் வலது திருவடியின்மீது ஒன்றின்மீது ஒன்றாக வைத்துக் காணப்படுகிறது. புத்தரின் தலையைச் சுற்றி வட்டமான ஒளிக்கற்றை காட்டப்பட்டுள்ளது.

தலையின்மீது குடையும், விருட்சமும் காணப்படுகின்றன. புத்தரின் இருபக்கங்களிலும் உள்ள அரியாசனத்தின்மீது இரு கந்தர்வர்கள் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் தலைமீது ஐந்து தலை அரவம் வனப்பூட்டுகிறது. அவர்கள் சாமரை தண்டை ஒரு கையில் பற்றி மற்றொரு கையை நீட்டி நிற்கின்றனர். புத்தரின் பின்புறம் நீண்ட திண்டு காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு. சோழர் கலை.

**ஆடும் பெருமான்** *122x81 செ.மீ.*
*குன்னியூர், தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் தாமரைப் பீடத்தில் கிடக்கும் முயலகன்மீது வலது காலை ஊன்றி, நான்கு கைகளுடன் ஆடும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. மேல் வலக்கை உடுக்கையையும் இடக்கை அனலையும் தாங்கி நிற்கிறது. தலையில் கொக்கிறகு,

பிறை, ஊமத்தம் பூ ஆகியவை அலங்கரிக்கின்றன. இவ்வுருவத்தைச் சுற்றி உள்ள திருவாசியில் 21 அனல் நாக்குகள் காட்டப்பட்டுள்ளன. அமைதி தவழ ஆடுகின்ற பெருமானின் இப்படிமம் முற்காலச் சோழரின் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழர் கலை.

**இராமர்** *105x57 செ.மீ.*
*திருவாலங்காடு, தஞ்சாவூர் மாவட்டம்*

தாமரை இருக்கைமீது வலது காலை ஊன்றி, இடது காலைச் சற்று முன் வைத்து இரு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. இராமரின் வலக்கை அம்பைப் பிடிக்கும் நிலையிலும், இடக்கை வில்லைத் தாங்கும் பாங்கிலும் காட்டப்பட்டிருக்கிறது. இராமரின் முடியைக் கிரீட மகுடம் அணி செய்கிறது. பிற்காலச் சோழர்கால அமைதியில் காணப்படுகிறது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**சீதை** *85x32 செ.மீ.*
*திருவாலஙகாடு, தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் தாமரைப் பீடத்தின்மீது வலது காலை ஊன்றி, இடது காலை முன்வைத்து இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. தலையில் செங்குத்தாக அமைந்த அழகிய மகுடமும், காதில் மகரக் குழையும், கழுத்தில் கண்டிகை, சரப்பளி, சரடு ஆகிய அணிகளும், மார்பில் புரிநூலும், கைகளில் கேயூரம், கடகம், காப்பு, வளையல் ஆகிய அணிகளும் அலங்கரிக்கின்றன. சீதையின் கழுத்து சற்று இடப்புறமாகச் சாய்ந்த நிலையில் உள்ளது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. பிற்காலச் சோழர் கலை.

**இலக்குவன்** *91x32 செ.மீ.*
*திருவாலங்காடு, தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் தாமரைப் பீடத்தின்மீது நின்ற கோலத்தில் இரு கைகளுடன் காணப்படுகிறது. அம்பைப் பிடிக்கும் பாவனையில் வலது கையையும், வில்லைப் பிடிக்கும் பாவனையில் இடது கையையும் கொண்டு விளங்குகிறது. தலையில்

மகுடமும், காதில் குழையும், கழுத்தில் அணிகளும், தோளில் வளையும், மார்பில் சன்ன வீரமும், மேல் வயிற்றில் உதரக் கச்சையும், தொடைவரை ஆடையும், காலில் பாதசரமும் அணி செய்கின்றன. அமைதியும், அழகும் தவழும் இப்படிமம் பிற் காலச் சோழர் காலத்தைச் சார்ந்தது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

**அனுமன்**

*திருவாலங்காடு, தஞ்சாவூர் மாவட்டம்*

இப்படிமம் தாமரைப் பீடத்தின்மீது இரு முழங்கால்களை முன்சாய்த்து, உடலை வளைத்துக் கழுத்தைச் சாய்த்து மிகவும் பணிவோடு வலது கையால் வாய்புதைத்து நிற்கிறது. இடது கை தொடைமீது அமைந்துள்ளது. தலை குனிந்து வாய் புதைத்து நிற்கும் இவ்வுருவம் பிந்திய சோழர் காலத்துக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

# இசைக் கருவிகள்

**ஐந்து முக இசைக் கருவி - குடமுழா**
*திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்*

குடமுழா-ஆடவல்ல பெருமானுக்கு விருப்பமான இசைக் கருவியாகத் தேவாரத் திருப்பதிகங்கள் விரித்துக் கூறுகின்றன. இறைவனின் ஆடலுக்கு ஏற்ப நந்தியம் பெருமான் குடமுழா வாசிப்பதை இலக்கியங்கள் குறிக்கின்றன. இவ்விசைக் கருவி ஐந்து முக இசைக் கருவி என்றும், குடமுழா என்றும் அழைக்கப் படுகிறது.

நந்தி குடமுழா வாசிக்கும் நிலையில் உள்ள சிற்பங்கள் ஏராளமாகக் காணக் கிடக்கின்றன. அவற்றில் திருப்பரங் குன்றம், காஞ்சி கைலாசநாதர் கோயில் போன்ற முற்காலப் பாண்டியர், பல்லவர் கோயில்களில் இசைக்கருவி சிற்பங்களில் இடம் பெற்றுள்ளன. தொன்மையான இச்சிற்பங்களில் குட முழா ஒரு முகம் உடைய இசைக் கருவியாகவே காணப்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்ட சிற்ப வளர்ச்சியில் ஐந்து முகம் உடைய இசைக் கருவியாகக் காண்கிறோம். சோழ நாட்டுச் சிற்பங் களில் இவ்விசைக் கருவி குட வடிவில் ஒரு முகம் உடையதாகவே காட்டப்பட்டுள்ளது.

விக்கிரம சோழன் காலம் தொடங்கித்தான் ஐந்து முகம் உடைய குடமுழாவைக் காணமுடிகிறது. எடுத்துக் காட்டாகச் சிதம்பரம் கோயில் நிருத்த சபையில் உள்ள சிற்பங்களில் எண் கரங்களுடைய சிவகணம் ஒன்று தம் முன்னுள்ள ஐந்து முகக் குடமுழாவை நான்கு கரங்களால் வாசிக்க, மேலும் இரு கரங் களைக்கொண்டு பக்கங்களில் உள்ள இரு ஒருமுக குடமுழாக் களை வாசிக்க, ஏனைய கரங்களைக்கொண்டு வியக்கும் முத்திரையைக் காட்டும் சிற்பத்தைக் காணலாம். இதே காலத்தைச் சார்ந்த மற்றொரு சிற்பத்தைக் குடந்தை சாரங்க பாணி கோயில் கோபுரத்தில் உள்ள நடனச் சிற்பத் தொடரில் காணலாம்.

மேலும் செந்தலை, தரங்கம்பாடி, திருப்புன்கூர், திருப்பைஞ்ஞீலி, திருவாலங்காடு, திருவானைக் கோயில் ஆகிய கோயில்களில் சோழர் கால ஆடவல்லான் செப்புத் திருமேனி களில் இக்கருவியைச் சிவகணங்கள் இசைக்கும் நிலையில்

காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கல்லிலும், செம்பிலும் சிறிய வடிவங்களாகக் காட்டப்பட்டுள்ள இக்குடமுழா நாயக்கர் காலத்தில் ஓவியத்திலும் இடம் பெற்றுள்ளது. மதுரை திருமலை மன்னர் கட்டுவித்த புதுமண்டபத்தில் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆட, நந்தி தன் முன்னிரு கைகளால் ஐந்துமுக இசைக் கருவியை வாசிக்கப் பின்னிரு கைகளால் இறைவனைப் போற்றி வணங்கும் நிலையில் உள்ள சிற்பம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை இம்மரபு தொடர்ந்து வந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது.

இலக்கியத்திலும், சிற்பத்திலும், செப்புத் திருமேனியிலும் ஓவியத்திலும் காட்டப்பட்டுவந்த ஐந்துமுக இசைக் கருவியைத் திருவாரூர் ஆலயம், சென்னை அருங்காட்சியகம் ஆகிய இடங்களில் இன்றும் காணலாம். ஆனால் இவ்விசைக்கருவி திருவாரூர்த் தியாகராசர் ஆலயத்தில் மட்டும் இன்றும் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆடவல்லான் முன்பும், ஊர்த்துவ தாண்டவர் முன்பும் இசைக்கப்பட்டு வந்த இவ்விசைக் கருவி திருத்துறைப்பூண்டியில் சோமாஸ்கந்தர் திருமேனி முன்பு புரட்டாசி மாதம் நிறைமதி நாளன்று இசைக்கப்பட்டு வந்துள்ளது. இக்கருவி திருத்துறைப்பூண்டி மருந்தீசுவரர் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கருவி உருவில் பெரியதாகக் காணப்படுகிறது. இக்குடமுழாவில்,

> "ஸ்வஸ்திஸ்ரீ இக்குடவிழா சமைப்பித்
> திட்டார் சிகாருடைய மல்லாண்டா
> ரான சோழ கோனார்"

என்றும், இதன் எடை 2,330 பலம் என்றும் பொறிக்கப் பட்டுள்ளது. இதைக்கொண்டு இக்குடமுழா குடவிழா எனவும் அழைக்கப்பட்டது எனத் தெரிகிறது. சிகாரைச் சேர்ந்த மல்லாண்டார் என்னும் சோழ கோனார் இதனைச் செய்து அமைத்திட்டார் என அறிகிறோம். எழுத்தமைதியைக் கொண்டு இவ்விசைக் கருவி கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கொள்ளலாம்.

இவ்வரிய இசைக் கருவி இவ்வரும்பொருட்காட்சியகத்தில் இடம் பெறுகிறது.

# சங்குகள்

தமிழக வரலாற்றில் சங்கு ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் மகளிர் சங்கு வளையல்கள் அணிந்திருந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

சங்கு ஆலய வழிபாட்டில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்று வந்திருக்கிறது என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிகிறோம். சில கல்வெட்டுக்கள் கோயில்களில் சங்கு வாத்தியம் வாசிக்கக் கொடை அளிக்கப் பெற்றதாகக் குறிக்கின்றன. தஞ்சைப் பெரியகோயிலில் பலவித இசைக் கருவிகள் வாசிக்கப்பட்டன. அவற்றில் சங்கும் ஒன்றாகும். இது 'முத்திரைச் சங்கு' என அழைக்கப்பட்டது. இம் முத்திரைச் சங்கு ஒன்றை ஊத தயிலன் விக்கியண்ணன் என்பவன் நியமிக்கப்பட்டிருந்தான் என்பதைக் கல்வெட்டு குறிக்கின்றது. கீழே குறிக்கப் பெறும் சங்குகள் இவ்வரும்பொருட்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

### கழிஞ்சூர் சங்கு

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரிலிருந்து காட்பாடி செல்லும் வழியில் உள்ள நெடுஞ்சாலையில் உள்ள கழிஞ்சூர் சொர்ணபுரீசுவரர் கோயிலில் கட்டிடப் பணிக்காகத் தோண்டும் பொழுது செப்புத் திருமேனிகளுடன் சில சங்குகளும் கிடைத்தன. ஒன்றில்,

"ஸ்ரீ கெஞ்சூர் இறையாநீசுர
முடையார்க்கு நகருடையாந்
செய்ய கோவந் இட்ட சங்கு"

எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

செய்யகோவன் முதலாம் இராசராசசோழன் காலத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகிறது.

### திருவிடைவாசல் சங்கு

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைவாசல் என்ற இடத்திலிருந்து சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சங்குகள்

சேகரிக்கப்பட்டன. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்தில்,

"சிங் நறுமகன் கொடுத்த சங்கு பொன்
கட்டியது"

எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில்,

உமையன்னை என்பவள் காவலூர் உடைய பிடாரிக்கு அளித்த சங்கு என்ற செய்தி தமிழ் எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

**திருவதிகைச் சங்கு**

தென் ஆர்க்காடு மாவட்டம், திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலில் உள்ள சங்கில்,

"திருச்சிற்றம்பலம் உடையார்"

என்று பொறிக்கப்பட்டுள்ளது.

★

# விளக்குகளும், பரிகலன்களும்

# விளக்குகள்

இலக்கியங்களில் பண்டைய தமிழ் மக்கள் பயன்படுத்திய விளக்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வில் 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட உலோகத்தால் ஆன விளக்குகள் கிடைத்துள்ளன. கல்லாலும் மண்ணாலும், உலோகத்தாலும் விளக்குகள் உருவாக்கப்பட்டன. அழகரை, கங்கைகொண்ட சோழபுரம், காஞ்சீபுரம், மதுரை, பழையாறை, பாஞ்சாலங்குறிச்சி இன்னபிற இடங்களில் நடந்த அகழ்வாய்வுகளில் பல்வேறு வகையான பண்டைய விளக்குகள் கிடைத்துள்ளன. அவை அக்காலத்திய விளக்கு வடிவங்களை நாம் அறிந்துகொள்வதற்கு நன்கு துணை செய்கின்றன.

தமிழ்நாட்டு ஆலயங்களில் உள்ள சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளிலும் வடிக்கப்பட்டுள்ள விளக்குகள் பல காணக் கிடைக்கின்றன. இவை பாவை விளக்கு, தீபலட்சுமி, விளக்கு நாச்சியார், விளக்குப் பதுமை என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றன. இறந்தோரின் நினைவாகக் கோயிலுக்கு விளக்குப் பதுமையைக் கொடையாக அளிக்கும் வழக்கம் தமிழ் நாட்டின் தென் பகுதியில் இன்றும் இருந்துவருகிறது. சோழர்களைத் தொடர்ந்து விசயநகர மன்னர், நாயக்கர், மராட்டியர், நகரத்தார் ஆகியோரால் அளிக்கப்பட்ட விளக்குகள் பல்வேறு வடிவங்களில் காணக்கிடைக்கின்றன.

தமிழ்நாட்டு ஆலயங்களில் வழிபாட்டிற்குரிய விளக்குகள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது. இப்பெயர்கள் வழிபாட்டு முறைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. அன்ன விளக்கு, அகல் விளக்கு, அலங்கார விளக்கு, காளா விளக்கு, குத்து விளக்கு, கை விளக்கு, குதிரை விளக்கு, சிம்ம விளக்கு, தூண்டா விளக்கு, தொங்கு விளக்கு, நந்தி விளக்கு, நட்சத்திர விளக்கு, புருஷா மிருக விளக்கு, மாட விளக்கு எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

கல்வெட்டுக்களில் சந்தி விளக்கு, நொந்தா விளக்கு ஆகிய விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. இறைவன் அருகில்

எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு நந்தா விளக்கு எனப் பெயர் பெற்றது. காலை, மாலை ஆகிய இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும் விளக்கு சந்தி விளக்கு எனப் பட்டது.

அரசர்களும் அரசமாதேவிகளும் தங்கள் பிறந்த நாளிலும், மங்கல நாளிலும் பல விளக்குகளை வெள்ளியிலும், செம்பிலும் செய்து அளித்து வந்துள்ளனர். பெருமக்களும், பொது மக்களும் விளக்குதானம் அளித்து வந்துள்ளதைக் கல்வெட்டுக்கள் விரித்துக் கூறுகின்றன. தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுக்கள் சுமார் 75 விழுக்காடு கோயிலுக்கு விளக்குக்காக அளிக்கப்பட்ட தானத்தைப் பற்றிக் கூறுகின்றன.

கோயில் விளக்குகளுக்காக அளிக்கப்பெற்ற நிலம் 'திருவிளக்குப்புறம்' என அழைக்கப்பட்டது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு 'ஐந்து நிலைக் குத்துவிளக்கு' 'மூன்று நிலைக் குத்துவிளக்கு' கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. திருமணஞ்சேரிக் கோயிலுக்குத் 'தொங்கும் விளக்கு' ஒன்று அளிக்கப்பெற்றதை மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு திருவெண்காட்டில் புதையலாக எடுக்கப்பட்ட இராசராசன் காலத்துச் செப்புத் திருமேனிகளுடன் கிடைத்த விளக்குகள் சிலவும் இங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவை கல்வெட்டுக்கள் குறிக்கும் சோழர்கால விளக்குகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இராசராசனின் தேவியான உலகமாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈழச்சியல் விளக்கு, மலையான்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஆர்க்குட விளக்கு, அனந்தலை விளக்கு, ஆகிய விளக்குகளை அளித்தாள் என அவற்றின் துல்லியமான எடைகளோடு கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

திருவாரூர்த் திருக்கோயிலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் அணுக்கியராக ஆடல்பணி புரிந்த ஒரு பெண்மணி 'நக்கன் பரவை நங்கை' என்பவள் நாட்டை ஆண்ட மன்னன்

இராசேந்திரனின் மனங்கவர்ந்தவள். ஆரூரன் திருக்கோயிலுக்கு மாமன்னன் இராசேந்திரனும், பரவை நங்கையும் தேரில் பவனி வந்து கோயிலுக்குள் நுழைந்து இறைவன் முன்பு வணங்கி நின்றனர். அவர்கள் நின்று வணங்கிய இடத்தின் நினைவாக ஒரு குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டது. உடையார் ஸ்ரீஇராசேந்திர சோழ தேவரும் அணுக்கியார் பரவை நங்கையாரும் நிற்கும் இடம் தெரியும் குத்துவிளக்கு ஒன்றும் எனக் கல்வெட்டு குறிக்கிறது. இதைத் தவிர 15,570 பலம் எடையுள்ள 28 பிரம்மாண்டமான குத்துவிளக்குகளை அளித்தாள். பரவை நங்கை, 'பச்சைப் பாவை உமை நங்கை' 'பாவைசரியா முலை நங்கை' எனப் பெயரிட்ட இரண்டு பாவை விளக்குகளையும் அளித்துள்ளாள்.எனவே அக்காலத்தில் பல விளக்குகள் பெயரிடப்பட்டு வழக்கத்தில் இருந்து வந்ததைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. இவ்வாறு காலந்தோறும் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட விளக்குகள் சிலவற்றை இங்கு காணலாம். இவை சிதம்பரம் 'இளமையாக்கினார் கோயிலுக்கு' உரியவை. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இவ்விளக்குகளில் அக்கோயிலின் பெயரும் அவ்விளக்குகளின் எடையும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

## சோடசோபசார அங்கங்கள்

ஆலய வழிபாட்டில் பல அங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று சோடசோபசாரம் ஆகும்.

1. ஆவாகனம் 2. தாபனம் 3. பாத்யம் கொடுத்தல் 4. ஆசனம் கொடுத்தல் 5. அர்க்கியம் கொடுத்தல் 6. அபிசேகம் 7. உடை, சந்தனம் 8. புட்பார்ச்சனை 9. தூப, தீபம் 10. நைவேத்தியம் 11. பலிபோடுதல் 12. ஓமம் 13. ஸ்ரீபலி 14. கேயம் வாத்தியம் 15. நர்த்தனம் 16. உத்வாசனம் எனப் பதினாறு வகை வழிபாட்டு முறைகளாக ஆத்மசாத்திர நூலில் குறிக்கப்பட்டு உள்ளது. இவ்வகை வழிபாட்டில்,

1. குடை 2. கொடி 3. விசிறி 4. கண்ணாடி 5. சுருட்டி 6. அப்தாகிரி 7. சாமரம் 8. அர்க்கிய பாத்திரம் 9. தீபம் 10. தூபம் 11. நாகதீபம் 12. யானைதீபம் 13. அலங்காரதீபம் 14. ரிசபதீபம் 15. அன்னதீபம் 16. புருசதீபம் 17. குதிரைதீபம் 18. மயில்தீபம் 19. அலங்காரதீபம் 20. சிங்கதீபம் 21. ஐந்து தட்டுடன் கூடிய பூரண கும்பம் 22. கோலதீபம் 23. நட்சத்திரதீபம் 24. கற்பூர ஆரத்தி 25. மேருதீபம் 26. ஏழுகிளைக் கற்பூர ஆரத்தி போன்றவைகொண்டு பூசை முறைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

# பண்டைய சோழர் காலத் தஞ்சை நகர அமைப்பு

இராசராசசோழன் காலத்திய தஞ்சை நகர அமைப்பி னுடைய மாதிரி வடிவம் இங்கு வைக்கப்பட்டுள்ளது. நகர அமைப்பில் சோழர் அரண்மனை, தஞ்சைப் பெரியகோயில், துர்க்கை கோயில், திருமால் கோயில், தஞ்சைத் தளிக்குலத் தார் இடம், நகரைச் சுற்றியுள்ள தெருக்கள், அகழி, கொத் தளம் முதலியவற்றைக் காணலாம். இங்கு உள்ளாலைச் சாலியத் தெரு, புறம்படி ராசவித்யாதரப் பெருந் தெரு, புறம்படி கந்தர்வ இடைத் தெரு, புறம்படி ஆனைக்கடுவார் தெரு, புறம்படி பண்ணையார் தெரு, புறம்படி வீரசோழப் பெருந் தெரு, தேவதாசிகள் தெரு முதலிய பண்டையத் தெருக்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. மேலும் அங்காடி, படைவீடு, மடவிளாகம், வேளம் ஆகிய பகுதிகளும் காட்டப்பட்டுள்ளன.

செந்தமிழ் நாட்டின் சீரிய வரலாற்றில் கலை, சமயம், ஆட்சி இலக்கியம் முதலிய துறைகள் அனைத்திலும் ஈடு இணையற்ற பெருந்தகையாக விளங்கிய பெருமன்னன் இராசராசன் காலத் தில் இத்தகைய நகரமைப்பு இருந்திருக்கலாம் எனக் கல்வெட்டு ஆதாரங்களைத் துணைகொண்டு யூகத்தின் அடிப்படையில் இம்மாதிரி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

# இராசேந்திர சோழனின் அரண்மனை மாதிரி வடிவம்

இராசராசசோழனின் மகன் இராசேந்திரசோழன் 'கங்கையும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்திருந்த செம்பியர்கோன்' என்று கல்வெட்டுக்களில் புகழப்பெறும் பெரு மன்னனாக விளங்கினான். இவன் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரம் சோழர்களின் இரண்டாவது தலைநகராக விளங்கியது. கங்கையின் வெற்றிக்குப் பிறகு இப்பகுதியில் ஒரு பெரும் நகரை நிருமாணித்துக் கோயிலை எடுப்பித்துத் தன் வெற்றியின் நினைவாகக் 'கங்கைகொண்ட சோழபுரம்' எனப் பெயரிட்டான்.

இப்பெரிய நகரம் தற்போது திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் உள்ளது. இப்பெரிய நகரம் தற்போது ஆயுதகளம், இடைக்கட்டு, உட்கோட்டை, கொல்லாபுரம், மெய்க்காவல்புத்தூர், வீரசோழ நல்லூர் என்ற பெயரில் பல சிற்றூர்களாகப் பிரிந்து காணப்படுகிறது.

உட்கோட்டை கிராமத்தில் மாளிகைமேடு என்ற பெயரில் ஒரு பழமையான இடம் இருந்தது. தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இப்பகுதியில் மூன்றுமுறை அகழ்வாய்வு மேற்கொண்டது. அகழ்வாய்வின் பயனாக அங்கு சோழ மன்னன் இராசேந்திரனின் அரண்மனைப் பகுதியின் அடித்தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அடித்தளம் இரட்டைச்சுவர் அமைப்புடன் அகலமாகக் காணப்படுகிறது. எனவே இவ்வரண்மனை பல நிலை மாடிகள் உடையதாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இவ்வகழ்வாய்வு அக்காலத்தில் பயன்படுத்திய செங்கற்களையும், கல்கட்டுமானத்தையும், ஓடுகளின் வகைகளையும், தூண்களின் அமைப்புகளையும் அறிந்துகொள்ளத் துணை செய்கிறது.

இவ்வரண்மனைப் பகுதியை அகழ்வாய்வு செய்தபோது அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொல்பொருட்கள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் சங்காலான பொருட்கள், தந்தத்தாலான யாளி உருவங்கள், காசுகள், சீன நாட்டுப் பானை ஓடுகள், இரும்பு அணிகள், மட்கலங்கள்' விலையுயர்ந்த கல் மணிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள சோழர் கால ஓவியத்தில் பல மாடிகளைக்கொண்ட கட்டிடம் ஒன்று தட்டையான ஓடுகள் வேய்ந்த கூரையுடன் காணப்படுகிறது.

அகழ்வாய்வில் வெளிப்பட்ட அரண்மனையின் அடித்தளப் பகுதி மாதிரி வடிவமாக இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 மீட்டர் சதுரத்தில் மாதிரி வடிவம் காணப்படுகிறது. அரண்மனை அடித்தளத்தின் மேற்பகுதியில் சுமார் 40 தூண்கள் இருந்ததற்கான அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளன. ஐந்து தூண்கள் மட்டும் வெளியில் காட்டப்பட்டுள்ளன. சுவர் இரண்டு நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. கீழ் அடுக்கு பெருத்தும், மேல் அடுக்கு சற்று சிறுத்தும் காணப்படுகிறது. கீழ் அடுக்கில் இருபது வரிசை செங்கல் கட்டப்பட்டு, மேல் அடுக்கில் பதினேழு வரிசை செங்கல் கட்டப்பட்டு அழகாக விளங்குகிறது.

## பரிகலன்கள்

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு கிராமத்தில் புதையலாகக் கண்டுபிடிக்கப்பட்ட படிமங்களுடன் பல பரிகலன்களும் கிடைத்துள்ளன. அவையாவன:

1. அகல் விளக்கு முனை போன்ற திறந்த வாயும், மூங்கில் கழியை ஒத்த உடலும், முடிச்சு இட்ட கயிற்றை ஒத்த கைப்பிடியும்கொண்ட நாழிப்படி, 2. செப்புக் குடுவை, 3. மலர் வடிவில் விரிந்த தட்டு, 4. ஊமத்தம் பூவை ஒத்த வாயுடைய

உலோகத்தாலான பரிகலன், 5. உலோகத்தாலான தீர்த்த மளிக்கும் மூக்குக் கெண்டி, 6. கீழே அகன்று கழுத்துப் பகுதி குறுகிச் செல்லும் சுரைக்காய் வடிவிலுள்ள செம்பு, 7. விரிந்த மலர் வடிவிலுள்ள பத்து இதழ் பூசை விளக்கு, 8. செம்பாலான ஒரு நிலைக் குத்துவிளக்கு, 9. மலர் வடிவிலுள்ள உலோகத் தாலான வடித்தட்டு, 10. மூன்று யானைகள் தத்தம் துதிக்கை யால் தாங்கிப் பிடிப்பதை ஒத்த செம்பாலான முக்காலி ஆகியன. இவை தவிர ஊதும் வெண்சங்குகளும் வைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தைச் சார்ந்த இப்பரிகலன்கள் கோயில் பூசை மற்றும் உபயோகத்திற்குப் பயன்பட்டவையாகத் தெரிகிறது.

★

# செப்பேடுகள்

## கரந்தைச் செப்பேடு

இராசராசசோழனின் அரும்பொருட் காட்சியகத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த மூன்று செப்பேடுகள் இடம் பெறுகின்றன. சுந்தர சோழனின் அன்பில் செப்பேடு, முதலாம் இராசராசனின் ஆனைமங்கலச் செப்பேடு, முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடு, வீர ராசேந்திரனின் சாராலச் செப்பேடு, முதற் குலோத்துங்கனின் சிறிய ஆனைமங்கலச் செப்பேடு முதலியன சோழர் காலச் செப் பேடுகள். இவற்றுள் குறிப்பிடத் தகுந்த செப்பேடு கரந்தைச் செப்பேடு ஆகும்.

கங்கைகொண்ட சோழன் முதலாம் இராசேந்திரனின் எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1020) வெளியிடப்பட்ட செப் பேடு. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அரிய சேகரிப்பாகையால் இச்செப்பேடு கரந்தைச் செப்பேடு என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள செப்பேடுகளுள் அளவில் மிகப்பெரிய செப்பேடு என்னும் பெருமைக்குரிய செப் பேடு கரந்தைச் செப்பேடு. 55 ஏடுகளும், ஒவ்வொரு ஏடும் சுமார் 16'' நீளமும் 9'' அகலமும் கொண்டது.

செப்பேடுகளின் விளிம்பில் துளையிடப்பட்டுப் பெரிய வளையத்தில் கோர்க்கப்பட்டுள்ளது. வளையத்தின் முகப்பில் சோழரின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இலச்சினை யின் மீது இராசேந்திரனின் பெருமை கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் மூன்று ஏடுகளில் சோழ அரசர்களின் பெருமை வட மொழிச் செய்யுட்களாகவும், அடுத்த 22 ஏடுகளில் கொடையாக வழங்கப்பெற்ற 51 ஊர்களைப் பற்றியும் எஞ்சிய 30 ஏடுகளில் கொடை பெற்ற பிராமணர்கள், செப்பேடு எழுதியவர், வெட்டியவர் முதலியவர்களைப்பற்றிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

முதலாம் இராசேந்திரனின் அமைச்சர் ஸ்ரீ ஜகநாதன் பிராமணர்களுக்குப் பிரம்மதேயமாக ஊர்களை வழங்க

வேண்டும் என்று விண்ணப்பம் செய்கின்றார். இராசேந்திரன் தனது ஆட்சியாண்டு எட்டு, நாள் 107-இல் பெரும்பற்றப்புலியூர் மாளிகையில் உள்ள இராசேந்திரசோழ பிரம்மாதிராசன் மண்டபத்திலிருந்து இக்கொடையை வழங்கியதாகச் செப்பேடு விவரிக்கிறது.

நித்தவிநோதவளநாடு, வீரசோழ வளநாட்டைச் சேர்ந்த 51 ஊர்களை ஒன்றாகச் சேர்த்து இராசேந்திரன் தன் தாயின் பெயரால் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் சூட்டி 1080 வேதம் வல்ல பிராமணர்க்குப் பிரம்மதேயமாக வழங்குகிறான்.

இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் 2,515½ வேலி நிலமாகும். இதன் ஆண்டு வருவாய் 51,050½ கலம் நெல்லும், மீன் பாட்டம் காசு 32ம், அக்கம் 62ம் ஆகும்.

இச்செப்பேட்டினைப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் இராசராசன் அரும்பொருட்காட்சியகத்திற்கு வழங்கிச் சிறப்பித்தோர் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்.

## வேதாரண்யம் செப்பேடு

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்த ஊர் பள்ளன்கோயில். இவ்வூரில் சில ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு செப்பேட்டுத் தொகுதிகள் மண்ணுக்குள்ளிருந்து வெளிப்பட்டன. அவற்றுள் முதல் செப்பேடு சிம்மவர்மப் பல்லவனால் சமணர்களுக்கு அளிக்கப்பெற்ற கொடையைப் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது செப்பேடு சுந்தர சோழன் காலத்துச் செப்பேடு ஆகும்.

இச்செப்பேடு வேதாரண்யத்தில் பாதுகாப்பாக வைக்கப் பெற்றிருந்து பெறப்பட்டதால் 'வேதாரண்யம் செப்பேடு' என அழைக்கப்பெறுகிறது. இச்செப்பேட்டினைப் போற்றிப் பாதுகாத்துத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு அன்புடன் வழங்கியவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் மகனார் திருமிகு வே. அப்பாக்குட்டி பிள்ளை அவர்கள் ஆவார்.

இச்செப்பேடு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. ஆறு ஏடுகள் மட்டுமே உதிரி ஏடுகளாகக் கிடைத்துள்ளன. சுமார் 27 செ.மீ. நீளமும், 10 செ.மீ. அகலமும் உடையவை. வளையம் கோர்ப்பதற்காக ஏடுகளின் வலது மூலையில் பெரிய துளைகள் உள்ளன. செப்பேட்டின் இருபுறமும் முற்காலச் சோழர் எழுத்து அமைவில் தமிழ் எழுத்துக்கள் எழுதப் பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் வரும் இடங்களில் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இச்செப்பேடு முதலும் முடிவும் இல்லாமல் இடையில் உள்ள ஆறு உதிரி ஏடுகள் மட்டுமே கிடைத்துள்ளன. என்றாலும் செப்பேட்டுச் செய்தியை ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது.

உம்பள நாட்டு இருமுடி சோழபுரத்து நகரத்தாரிடை விலையாகக் கொண்ட நிலத்தில் சுந்தரசோழன் பெயரால் 'சுந்தரசோழப் பெரும்பள்ளி' என்னும் பள்ளி அமைக்கப் பட்டது. இச்சுந்தர சோழப் பெரும்பள்ளிக்குப் போக மாகப் புறங்கரம்பை நாட்டைச் சேர்ந்த தன்வலிப்பூண்டி ஊரடங்கல் முப்பது வேலி நிலமும் பள்ளிச்சந்தமாக வழங்கப் பெறவேண்டும் என்று அரசனிடமிருந்து திருமுகம் வந்தது. அரசனின் ஆணையை ஏற்ற புறங்கரம்பை நாட்டு நாட்டாரும் (உழவர் பெருமக்கள்) பிரம்மதேயக் கிழவர்களும், புறங் கரம்பை நாடு வகை செய்கின்ற செம்பியன் பிரம்ம மாராயன் முன்னிலையில் மேற்படி முப்பது வேலி நிலத்தைக் கல்லும், கள்ளியும் நாட்டிப் பள்ளிச்சந்தமாக வழங்கினர் எனச் செப்பேடு தெரிவிக்கின்றது.

குழலூர்ச் சாக்கியப்பள்ளி, வண்டாழை வேளூர்க் கூற் றத்து வேளூர், வண்டாழை வேளூர்க் கூற்றத்துப் பிரம்மதேயம் நாரணமங்கலம் முதலிய இடங்களைப் பற்றியும், குன்றூர் அரையன் மறைக்காடன், திட்டைச்சேரி சாத்தன் மாதவன், சிங்களாந்தகன் முதலியவர்களைப்பற்றிய குறிப்புகளும் இச்செப்பேட்டில் இடம்பெற்று உள்ளன.

## வேலஞ்சேரிச் செப்பேடு

செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணிக்கு அருகிலுள்ள வேலஞ்சேரி என்னும் ஊரில் பல்லவமன்னன் அபராசிதனுடைய செப்பேடு ஒன்றும், பராந்தகச் சோழன் செப்பேடு ஒன்றும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பராந்தகச் சோழனுடைய வேலஞ்சேரிச் செப்பேடு இவ் அரும்பொருட் காட்சியகத்தில் இடம்பெறுகிறது.

ஐந்து ஏடுகளும் சோழர் முத்திரை பொறித்த வளையத்துடன் கூடியது. 22 செ.மீ. நீளமும், 6.5 செ.மீ. அகலமும் உடையது. ஏடுகளின் இருபுறமும் முதற்பகுதி கிரந்த வரிவடிவிலும், இரண்டாம் பகுதியில் தமிழ் எழுத்துக்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேடு பராந்தகச் சோழனின் 25-ஆம் ஆட்சி யாண்டைச் சேர்ந்தது. (காலம் கி.பி. 932) வடமொழிப் பகுதியில் சோழ அரசர்களின் வம்சத்தைப் பற்றிய செய்திகள் செய்யுள் வடிவில் உள்ளன.

பராந்தகசோழன் இராமேசுவரம், கன்னியாகுமரி, திருவரங்கம் முதலிய இடங்களில் துலாபாரம் புகுந்தான் என்னும் புதிய வரலாற்றுச் செய்தியை இச்செப்பேடு தருகின்றது. சோழப் பேரரசைத் தோற்றுவித்த விசயாலய சோழனின் தந்தை பெயர் ஒற்றியூரன் என்னும் புதிய செய்தியை இச்செப்பேடு தருகின்றது.

தமிழ்ப் பகுதி கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்குகிறது. இக்கொடை பராந்தகனின் 25-ஆம் ஆண்டு நாள் 193-இல் வழங்கப்பெற்றது.

பிராமணர்களுக்குக் கொடை கொடுக்குமாறு பிரம்ம வனவாதிராஜா என்பவன் பராந்தகச் சோழனிடம் வேண்டிக் கொண்டான். பராந்தகன் பிரம்மதேயமாக ஊர்களை வழங்க ஆணை பிறப்பித்தான். எனவே வேத ஆகமங்களில் வல்ல மேலிருஞ்செற்றுச் சபையார்க்குப் பிரம்மதேயமாகத் தாழை வேடு, மயங்காறு, கீழகல் என்னும் மூன்று ஊர்களும் இணைத்து

வழங்கப்பட்டு, மேற்படி செய்தி இச்செப்பேட்டில் பொறித்து வழங்கப்பட்டது. பிரம்மதேயமாக பிராமணர்க்கு வழங்கப் பெற்ற ஊர்கள் திருத்தணிக்கு அருகில் உள்ள ஊர்கள். கொடை பெற்ற மேலிருஞ்செறு சபையாரைச் செப்பேடு 'நல்லூர் நற்பார்ப்பார்' என அழைக்கிறது. கொடையாக வழங்கப்பெற்ற ஊர்களில் கூட்டோட்டால் மாடமாளிகை அமைத்துக்கொள்ளவும், ஏரிகளில் நீர் நன்கு நிறைவதற்கு ஏற்றவாறு ஆறு, கால்வாய் முதலியவைகளைச் செம்மைப் படுத்திக் கொள்ளவும் அரசனால் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இவ்வூர் ஏரி, கால்வாய்களில் கூடை நீர் எடுத்தல், குற்றேத்தம் அமைத்தல் முதலியன தடை செய்யப்பட்டன.

பராந்தகனின் வேலஞ்சேரிச் செப்பேடு வரலாற்றுச் செய்தி களைத் தருவதுடன் முற்காலச் சோழர் காலத்துச் சமுதாய நிலை எவ்வாறு இருந்தது என அறிவதற்கும் துணைபுரிகிறது.

★

# கல்வெட்டுக்கள்

## உத்திரமேரூர்க் கல்வெட்டு

செங்கற்பட்டு மாவட்டம் உத்திரமேரூரில் வரலாற்றுச் சிறப்புடைய இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. ஊராட்சித் தேர்தல் முறை பற்றியவை இவை. முதல் கல்வெட்டு பராந்தக சோழனின் 12-ஆம் ஆட்சியாண்டையும் (கி.பி. 919) இரண்டாம் கல்வெட்டு பராந்தகனின் 14-ஆம் ஆட்சியாண்டையும் சேர்ந்தவை.

இக்கல்வெட்டுக்கள் உத்திரமேரூர் ஊர்ச்சபைக்கும், அதன் வாரியங்களுக்கும் உறுப்பினர்கள் குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கான நெறிகளையும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் பெற்றிருக்கவேண்டிய தகுதிகளையும் பற்றி விரிவாகப் பேசுகின்றன.

அரசன் ஆணைப்படி வந்திருந்த தத்தனூர் மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரியின் முன்னிலையில் ஊர்ச் சபைக்குச் சம்வத்சர வாரியம் தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்சவார வாரியம், பொன் வாரியம் என்னும் வாரியங்களை அமைப்பதற்குரிய விதிமுறைகளைப் பற்றி பேசப்பட்டதை முதல் கல்வெட்டு கூறுகிறது.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு அரசன் ஆணைப்படி அரசியல் அதிகாரி சோமாசிப் பெருமான் முன்னிலையில், உத்திரமேரூர்ச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் முன்பு அவர்களாகவே ஏற்படுத்திய விதிமுறைகளில் இருந்த சில இடர்ப்பாடுகளை அனுபவத்தால் அறிந்ததால், அக்குறைபாடுகளை நீக்கிச் செம்மையான முறையில் விதிமுறைகளை அமைத்துக் கொண்டதை இரண்டாவது கல்வெட்டு புலப்படுத்துகிறது.

## எண்ணாயிரம் கல்லூரிக் கல்வெட்டு

தென் ஆர்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தைச் சார்ந்த இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று அங்கு நடைபெற்றவடமொழிக் கல்லூரியைப் பற்றிய செய்தியை அறிவிக்கிறது.

இராசராச சதுர்வேதிமங்கலம் சபையார் அரசு அதிகாரி ஒருவர் முன்னிலையில் முதல் இராசேந்திரன் ஆணைப்படி

எண்ணாயிரம் என்ற அவ்வூர்க் கல்லூரி ஆசிரியர்களின் சம்பளத்திற்கும், மாணவர்களின் சாப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்வதாக முடிவு செய்தனர். இக்கல்வெட்டு அங்கு படித்த மாணவர்களின் எண்ணிக்கை, பயின்ற பாடங்களின் முக்கியத் துவம், பணிபுரிந்த ஆசிரியர்கள் பெற்ற மதிப்பு, அவர்தம் மாத ஊதியம், பலதரப்பட்ட மாணவர்களுக்கும் நாள்தோறும் ஆகும் செலவு முதலியவைபற்றி விரிவாக எடுத்துக் கூறுகிறது. வேதம், வேதாந்தம், தர்க்கம், வியாகரணம் முதலியவற்றைக் கற்பிப் பதற்காக 14 ஆசிரியர்களையும், 340 மாணவர்களையும் கொண்ட ஒரு பாடசாலையாக அதுதிகழ்ந்தது.

340 மாணவர்களில் இளநிலை மாணவர்கள் 270 பேர், முதுநிலை மாணவர்கள் 70 பேர். இளநிலை மாணவர் நாள் ஒன்றுக்கு 6 நாழி நெல்லும், முதுநிலை மாணவர் நாளொன் றுக்கு (ஒருவர்க்கு) 10 நாழி நெல்லும், ஆசிரியர் 16 மரக்கால் நெல்லும் மற்றும் விதிக்கப்பெற்ற பொன்னையும் பெற்றனர், இப்பணி நடைபெறுவதற்காக இரண்டு ஊர்கள் கொடையாக வழங்கப்பட்டன.

இராசராசச் சதுர்வேதி மங்கலம் என்னும் இவ்வூர்ச் சபையார் இந்த ஏற்பாடுகளை அரசன் வகுத்துக்கொடுத்த ஆணைப்படி அரச அதிகாரி ஒருவன் முன்னிலையில் செய்தனர்.

## திருபுவனைக் கல்வெட்டு

தென் ஆர்க்காடு மாவட்டம் திருபுவனை என்று வழங்கப் படும் திருபுவன மகாதேவிச் சதுர்வேதிமங்கலத்தில் உள்ள இராசாதிராசன் காலத்துக் கல்வெட்டின் படி ஒன்று அரும் பொருட் காட்சியகத்தில் இடம் பெறுகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1048.

திருபுவன மகாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் ஒரு பாடசாலையும், மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ற ஓர் அறச் சாலையும் (தங்கும் விடுதி) இராசாதிராசன் காலத்தில் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் மாணவர் 260 பேர். ஆசிரியர் 12 பேர். இங்கு இளநிலை மாணவர்க்கு 6 படி நெல்லும், (நாளொன்றுக்கு), முதுநிலை மாணவர்க்கு 8 படி நெல்லும், ஆசிரியர்க்கு 14 மரக்கால் நெல்லும் வழங்கப்பெற்றதாகக் கல்வெட்டு சுவைபடக் கூறுகிறது.

## திருமுக்கூடல் கல்வெட்டு

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சீபுரத்துக்கு அருகில் உள்ள ஊர் திருமுக்கூடல். கி.பி. 1067-இல் வீரராசேந்திரன் காலத்தில் பொறிக்கப்பட்ட இவ்வூர்க் கல்வெட்டு, ஊரில் எழுந்தருளியிருக்கும் திருமால் கோயிலுக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவு, அவற்றை நடத்துவதற்குக் கிடைக்கும் வருவாய் முதலியவைகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. வீரசோழன் என்ற பெயரால் ஆதுல சாலையும் (மருத்துவச் சாலை), மருத்துவக் கல்லூரியும் கோயில் நிர்வாகத்தில் நடைபெற்று வந்ததை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது

எண்ணாயிரம் கல்லூரியைவிட இது சிறிய கல்லூரி. இங்கு இருக்கு, யசுர் ஆகிய இரு வேதங்களும், வியாகரணமும் கற்பிக்கப்பட்டன. கல்லூரிக்கும் மாணவர்க்கும் வேண்டும் குற்றேவல்களைச் செய்யப் பணிமகளிர் இருவர் இருந்தனர்.

உணவுக்கு அரிசி, படுக்கப் பாய், சனிதோறும் நீராட எண்ணெய்யும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை அளவால் மிகப் பெரிய கல்வெட்டு என்பர்.

## திருக்கோயிலூர்ப் பாடல் கல்வெட்டு

தென்ஆர்க்காடு மாவட்டம் திருக்கோயிலூரில் முதலாம் இராசராச சோழனின் 27-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுப் படி இங்கு இடம் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டைப் போன்று நெடும் பாடல் வடிவில் உள்ளது. மேலும் பத்துப்பாட்டுப் பாடலைப் போன்று 'கிழவோனே' எனவும் முடிகிறது.

இராசராசனுடைய அதிகாரி வீதிவிடங்கன் கம்பன் என்பவனால் கொடுக்கப்பட்ட கொடையைப் பற்றியது.

திருக்கோயிலூர் வீரட்டானத்து இறைவனுக்குத் தேவன்குடி முதலான ஊர்களை வழங்கி இறைவனுக்குத் திருவமுது, தயிர். முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதைப்பற்றி விரிக்கிறது. மேலும் இக்கோயிலில் பணிபுரிந்த 32 நாடக மகளிர் திருவாய்க் கேள்வி, பஞ்சாசாரியர் முதலியோர்க்கும் வீதிவிடங்கன் கம்பன் கொடை கொடுத்துள்ளான் என்பதைத்தெரிவிக்கிறது.

வீரட்டானத்தாரின் முடிமேல் வைக்கப் பொன்னாலான பூ, மூன்று கழஞ்சு பொன்னால் பூ வேலைப்பாடுடன் செய்யப்பட்ட மணிப்பட்டம் ஒன்று, நூறு பொன்னால் சிவலிங்கம் ஒன்று, அதற்கு வெள்ளியினால் பீடம் ஒன்று முதலியவற்றை விடங்கன் கம்பன் செய்து வழங்கினான் என்று கல்வெட்டு புகழ்கிறது.

'வேலியர் கோன் வீதிவிடங்கன் விறல்கம்பன்
ஆலியல் பான் சோழனதிகாரி - கோலப்
படியின்மேல் பொற்பூப் பைங்கோவல் வீரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று'

என்பது கல்வெட்டுப் பகுதி. மேலும் இராசராசனின் புகழை,

'தண்தமிழ் நாடன் சண்ட பராக்ரமன்
திண்டிறல் கண்டன் செம்பியர் பெருமான்
செந்திரு மடந்தை மன் சீராசராசன்'

எனவும் புகழ்கிறது. அவன் தாய் வானவன் மாதேவியை,

'புலியைப் பயந்த பொன்மான்
கலியைக் கரந்து கரவாக் காரிகை
சுரந்த முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகப் பிரியாத் தையல்'

எனவும் போற்றிப் பாடி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மேலும் சங்க இலக்கியப் பாவலன் கபிலனுடைய

'மினல் புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல் புகும் கபிலக் கல்'

திருக்கோயிலூரில் இருந்ததாகத் தெரிவிக்கும் சிறப்பு வாய்ந்த கல்வெட்டும் இதுதான்.

★

## எலவாசனூர்க் கல்வெட்டு

தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டை வட்டம் எலவாசனூரிலிருந்து படியெடுக்கப்பெற்ற சோழர் காலச் சமுதாய வரலாற்றைக் கூறும் கல்வெட்டுப்படி ஒன்று அரும்பொருட் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது. இக் கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராசாதிராச தேவர்க்கு யாண்டு பத்து எனத்தொடங்குகிறது. கோச்சாத்தன் காமன் என்பவனின் மனைவி முன்கோபத்தால் தன் மகள்மீது கோபம் கொண்டு கோல் ஒன்றை எறிந்தாள். அக்கோல் அருகில் விளையாடிக்கொண்டிருந்த அடுத்தவள் மகள் மீது தாக்கி 20 நாளில் இறந்தும் போனாள். இவ்வழக்கு ஊர்ப்பொது மன்றுக்கு வருகிறது. குற்றம் கைப்பிழையாகச் செய்யப் பட்டது என நாட்டார் முடிவுசெய்து, குற்றத்திற்குத் தண்டனை யாக ஊர்ப்பாகம் கொண்டருளிய நாயனார் கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிக்கவேண்டும் எனப் பணித்தனர்.

## சோழர்காலக் காசுகள்

அன்றாடு நற்காசு, பழங்காசு, அன்றாடு நற்பழங்காசு, மதுராந்தகன் மாடை, கருங்காசு, ஈழக்கருங்காசு என்றவாறு காசுகள் சோழர் காலத்தில் வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஈழக்காசு என அழைக்கப்பட்ட சோழர் காலத்துக் காசுகளில் ஒருபுறத்தில் ஒரு மனித உருவம் நின்று கொண்டிருப்பதுபோலவும், மறுபக்கத்தில் அதே உருவம் அமர்ந்திருப்பது போலவும் காண்பிக்கப்பட்டுள்ளன. இராச ராசசோழன் காலத்தில் வெளியிடப்பட்ட இத்தகைய ஈழக்காசு களில் 'ஸ்ரீராசராச' என நாகரி எழுத்துக்களில் பொறிக்கப் பெற்றுக் காட்சிப்பேழை ஒன்றுக்குள் அழகுறக் குவித்து வைக்கப் பட்டுள்ளன. அருகில் சோழர் காலத்தைச் சேர்ந்த பணச் சொம்பு என்று அழைக்கப்பட்ட பல்வேறு அளவுகளுடன் கூடிய உண்டியல்கள் சிலவும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கங்கைகொண்ட சோழன், உத்தமசோழன் என நாகரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள், குலோத்துங்க சோழன் வெளியிட்ட தங்கக் காசு முதலிய

வற்றின் மாதிரிகள் இடம்பெற்றுள்ளன. எழுத்துப்பொறித்த காசுகளின் மறுபுறம் புலி, இரட்டைமீன், வில் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன.

## அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள்

சோழர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த பழையாறை, கங்கைகொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வில் கிடைத்த சோழர் காலத்தைச் சேர்ந்த அரும் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தைச் சேர்ந்த சுடுமண் காதணிகள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் சதுரங்கக் காய்கள், சுடுமண்ணாலான விளையாட்டுக் கருவிகள், சுடுமண் கெண்டி, அலங்காரப் பானை ஓடுகள், விலை உயர்ந்த கல்மணிகள், காசுகள் வார்த்தெடுக்கும் கருவி, கங்கை கொண்ட சோழபுரம் அரண்மனையில் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய செங்கல்கள், ஓடுகள், இரும்பு ஆணிகள் முதலியன இடம்பெற்றுள்ளவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

தஞ்சைப் பெரிய கோயில் கருவறையைச் சுற்றியுள்ள சிறிய திருச்சுற்றில் சோழர் காலத்தைச் சேர்ந்த அரிய ஓவியங்கள் உள்ளன. இவ்வோவியங்களைப் பொதுமக்கள் பார்ப்பது அரிது. எனவே தஞ்சைப் பெரிய கோயில் கருவறை போன்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதன் திருச்சுற்றில் பெரிய கோயில் ஓவியங்களின் பிரதிகள் துணியில் தீட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் முதிய வேதியராக இறைவன் வருகை புரிந்து சுந்தரர் திருமணத்தைத் தடை செய்யும் தடுத்தாட்கொண்ட புராண ஓவியம், சேரமான் பெருமாள் நாயனாருடன் வெள்ளை யானைமீது அமர்ந்து கயிலை செல்லும் சுந்தரர் ஓவியம், இராசராசன் கருவூர்த்தேவர் ஓவியம், சோழர்கால நாட்டிய மகளின் ஓவியம், நடராசர் திரிபுராந்தகர் ஓவியம் முதலியன குறிப்பிடத்தக்கவை.

# பறைகள்

## சோழர் காலத்துப் பறை

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், செட்டிப்புலம் என்னும் ஊரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சோழர்காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்புப்பறைகள் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. இவை சென்னை அருங்காட்சியக சேகரிப்பிலிருந்து பெறப்பட்டது. இவ்வித எழுத்துப் பொறித்த சோழர் காலத்துச் செப்புப் பறைகளை வேறு எங்கும் காண்பதரிது. இது கி.பி 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச் சோழர் காலத்தது.

உருளை போன்ற அமைப்பில் ஒருபுறம் அகன்ற வாய் உடையதாகவும், மற்றொருபுறம் குறுகிய வாய் உடையதாகவும் இப்பறைகள் உள்ளன. சுமார் 30 செ.மீ. நீளத்திலும் பறையின் அகன்ற வாய்ப்பகுதி 20 செ.மீ. அகலத்திலும் குறுகிய வாய்ப்பகுதி 12.5 செ மீ. அகலத்திலும் அமைந்துள்ளன. இரு புறமும் திறப்பாக உள்ள வாய்ப்பகுதியில் தோலை இழுத்துக் கட்டிப் பறையாக இதனைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். சோழர் காலச் சிற்பங்களில் இத்தகைய அமைப்புடைய பறைகளைக்கொண்டு இசைக்கும் கலைஞர்களின் உருவத்தைக் காணலாம்.

இராசராசன் அரும்பொருட் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு செப்புப்பறைகளில் ஒன்றில் எழுத்துப் பொறித்தும், மற்றொன்றில் எழுத்துக்கள் இன்றியும் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் அழகிய பாடல் வடிவில் அமைந்துள்ளது. இப்பறையை, 'புலிக்கடுவன்' எனப் பாடல் கல்வெட்டு குறிக்கிறது. இதைக் கொடையாக அளித்த சமுதாயத்தாரையும் கல்வெட்டு குறிக்கிறது. குறிப்பாக இரு பறைகளின் மீது அழகிய சில பண்டைய சிற்பங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

## முதல் பறை

இப்பறையின் வெளிப்புறம் மூன்று பகுதியாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அகன்ற வாய்ப்பகுதியை ஒட்டிச் சுற்றிலும்

சோழர்கால வரிவடிவில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்களின் இடைப்பகுதியில் உள்ள இடைவெளியில் 4 கழிகள் போன்ற அமைப்பும் (நெசவில் பயன்படுத்தும் கருவிகள்?) சங்கு ஒன்றும், பன்றியின் மீது மயில் நிற்பது போன்றும் உருவங்கள் உள்ளன.

இரண்டாவது பகுதியில் கை, கால்களுடன் கூடிய மனித உடலும் பருந்தின் தலையைத் தலையாகக்கொண்ட விலங்கு ஒன்றின் உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வுருவம் அமரல், நிற்றல், ஓடுதல் முதலிய பல்வேறு நிலைகளில் 8 உருவங்களில் காட்டப்பட்டுள்ளன. இவ்வுருவங்களுக்குக் கொண்டைகள் உள்ளன. ஒரு சிலவற்றுள் இவ்வுருவம் கையில் வாள், கோடரி, அங்குசம் போன்ற ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டுள்ளது. ஒவ்வொரு உருவத்தைச் சுற்றிலும் வட்ட வளையம் உள்ளன. மூன்றாவது பகுதியில் 6 பெரிய திருவாசிகளும் அதற்குள் 6 சிறிய திருவாசிகளும் காட்டப்பட்டுள்ளன.

முதற் பகுதியில் சோழர் கால வரிவடிவில் (கி.பி. 1221) வரிகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள் அழகிய நேரிசை வெண்பாவாக அமைந்துள்ளது:

'கன்னவிலு மாடக் கரிகால சோழபுரித்
தன்மை நிகழ்கா லிகர்தன்மம் பொன்னே
புலிக்கடுவன் மாகாளி பொற்பறைக்கு நாமம்
புலிக்கடுவ னென்றே புகல்'

கரிகால சோழபுரி என வழங்கப்பட்ட செட்டிப்புலம் கிராமத்தில் வசிக்கும் நெசவாளர் (காலிகர்) சமுதாயத்தினர் சோழ மன்னனுக்குப் பொன் எனப் போற்றத்தக்க இப்பறையைப் 'புலிக்கடுவன்' எனப் பெயர் சூட்டி வழங்கியதாகப் பொறிக்கப் பட்டுள்ள. நேரிசை வெண்பாப் பாடலிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

## இரண்டாவது பறை

இப்பறையில் எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இப்

பறையும் முதல் பறையைப் போன்று வெளிப்புறம் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டு இரண்டாவது பகுதியும், மூன்றாவது பகுதியும் முன்னதைப் போன்று முறையே 8 மனித உடல், பருந்துதலை விலங்குஉருவங்களும், 12 திருவாசிகளும் கொண்டு காணப்படுகின்றன.

முதற் பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்படாமல் மேற்படி விலங்கு உருவங்கள் எட்டும், நான்கு கைகளுடன் கூடி நின்ற நிலையில் உள்ள அம்மனின் உருவம் ஒன்றும் காணப் படுகின்றன. இவ்விலங்கு உருவம் இப்பகுதியில் பால்காவடி தூக்கிய நிலையிலும் நாகத்திற்கு அருகே நின்று வழிபடும் நிலையிலும், ஒரு உருவம் மற்றொரு உருவத்தை அழைத்துச் செல்லும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளன. இவ்விலங்கு உருவம் காட்டப்படும் இடங்களிலெல்லாம் எட்டு உருவங்களாகவே காட்டப்படுவது ஆய்வுக்கு உரியது.

சோழர் காலத்தைச் சேர்ந்த இப்பறைகள் பார்வையாளர் களின் கலைக் கண்களுக்கு அரிய கலை விருந்து ஆகும்.

# பிற்சேர்க்கை

## திருவாலங்காட்டுச் செப்பேடு

முதல் இராசேந்திர சோழனின் ஆறாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட சிறப்புவாய்ந்த செப்பேடு திருவாலங்காட்டுச் செப்பேடு. சுமார் 31, 16 செ.மீ. நீள அகலமும் 31 ஏடுகளையும் கொண்டது இச்செப்பேடு. 31 ஏடுகளும் வளையத்தில் கோர்க்கப்பெற்று முத்திரை இடப்பெற்றுள்ளது. முத்திரையில் புலி, இரட்டை மீன், குத்துவிளக்கு, இரு கவரி, குடை, பன்றி, ஸ்வஸ்திக அடையாளம் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன.

செப்பேட்டின் இருபுறமும் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. வடமொழிப் பகுதி கிரந்த எழுத்துக்களிலும் தமிழ்ப் பகுதி சோழர் காலத் தமிழ் எழுத்துக்களிலும் எழுதப்பட்டுள்ளன. வடமொழிப் பகுதியான முதல் 271 வரிகள் சோழ அரசர்களைப் பற்றியவை. தமிழ்ப் பகுதி 524 வரிகளைக் கொண்டது. முதல் 145 வரிகளில் கொடைபற்றி அலுவலர்களுக்கு அரசன் இடும் ஆணையும், அடுத்த 281 வரிகளில் கொடை வழங்கிய ஊரின் எல்லை முதலியன பற்றியும், அடுத்த 98 வரிகளில் கொடைக்குரிய உரிமைகள், உடன் இருந்து ஒப்பம் இட்டோர் முதலிய விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

வடமொழிப்பகுதியில் விசயாலயன் தஞ்சையை வென்று தலை நகராக்கி நிசும்பசூதனி கோயில் அமைத்தது, ஆதித்தன் அபராசித பல்லவனை வென்று தொண்டை நாட்டைச் சோழர் ஆட்சிக்கு உட்படுத்தியது, பராந்தகன் மதுரையும் ஈழமும் கொண்டது, தில்லைக்கோயிலுக்குப் பொன் வேய்ந்தது, இராசாதித்தன் ராட்டிரகூட அரசன் மூன்றாம் கிருட்டிணனை வென்றது, சுந்தரசோழன் இறக்க மனைவி வானவன் மாதேவி உடன் வானகம் சென்றது, இராசராசன் பாண்டியன் அமரபுயங்கனை வென்றது, முதல் இராசேந்திரன் பாண்டியனை வென்று, பாண்டிய நாட்டில் தன் மகனைச் சோழ பாண்டியன்

என்னும் பெயரில் அரசனாக்கியது, இராசேந்திர சோழன் ஆணையின் பேரில் அவன் படைத் தலைவன் கங்கைவரை படைகொண்டு சென்று வென்று கங்கை நீரைக் கொணர்ந்தது முதலிய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப்பகுதி கோனேரின்மை கொண்டான் எனத்தொடங்கு கிறது. இராசேந்திரசோழனின் 'திருமன்னிவளர' எனத் தொடங் கும் மெய்க்கீர்த்தி இடையில் வருகிறது. தமிழ்ப்பகுதி இரு பிரி வாக உள்ளது. முதல் பிரிவு சயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்துப் பழையனூர் நாட்டுப் பழையனூர் உடையார் திருவாலங்காடு உடையார் கோயில் அம்மை நாச்சி யார்க்குத் தேவதானமாக 25½ வேலி நிலம் வழங்கப்பட்டதைக் கூறுகிறது. இரண்டாவது பிரிவு திருவாலங்காடுடைய மாதேவர்க்கு (சிவன் கோயிலுக்கு) வழங்கப்பெற்ற கொடை பற்றியது.

இராசேந்திரசோழன் முடிகொண்ட சோழபுரத்து வீட்டின் உள்ளால் உள்ள கருமாளிகை மதுராந்தக தேவனில் தெற்கில் மறைவிடத்து இருந்தபோது இச்செப்பேட்டுக்கொடை வழங்கப் பெறுகிறது. கொடை பற்றிய அரசனின் ஆணையை ஓலையில் எழுதியவன் நாராயணன் கற்றளியான உத்தம சோழத் தமிழ தரையன். ஓலையில் எழுதியதை ஓலை நாயகன் உத்தம சோழப் பல்லவரையனும், கிருட்டினன் இராமனான இராசேந்திரசோழ பிரம்மமாராயனும், அரையன் சீகண்ட னான மீனவன் மூவேந்த வேளானும், தாமோதிர பட்டனும் ஒப்பிட்டுப்பார்த்தனர். செப்பேட்டுக் கொடை அரசனால் வழங்கப்பெறும்போது கருமமாராய்வான், நடுவிருக்கை, புரவு வரித்திணைக்களம், வரிப்பொத்தகம், வரிப் பொத்தகக் கணக்கு, முகவெட்டி, கீழ்முகவெட்டி, கருமாணிக்கன், பட்டோலை முதலிய சோழர் கால அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர் எனச் செப்பேடு விவரிக்கின்றது.

நடுவின்மலை பெருமூர் நாட்டுச் சிங்களாந்தகச் சருப்பேதி மங்கலத்துச் சபையார்க்கு பிரம்மதேயமாய் வருகின்ற மேல் மலைப் பழையனூர் நாட்டுப் பழையனூரை பிரம்மதேயத்தி

னின்று தவிர்த்து வெள்ளான் வகையில் மாற்றிப் பழையனூர் திருவாலங்காடு உடைய மகாதேவர்க்குக் கொடையாக வழங்கப் பெற்றது. எனவே ஆண்டுதோறும் திருவாலங்காடு சிவன் கோயிலுக்கு 3,288 கலம் 7 குறுணி, 5 நாழி நெல்லும், 193 கழஞ்சு, 1 மஞ்சாடி, 1 மா பொன்னும் வருவாய் வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. பிரம்மதேயமாக இதுவரை இருந்த பழையனூரை வெள்ளான் வகையாக மாற்றிக் கோயிலுக்குக் கொடை வழங்கிய இராசேந்திர சோழனின் செயல் குறிப்பிடத் தக்கது.

கொடையாக வழங்கப்பட்ட ஊரின் அனைத்து உரிமை களும் கோயிலுக்கே வழங்கப்பட்டன என்பதை "இவ்விசைத்த பெருநான்கெல்லையுள்ளும் அகப்பட்ட நீர்நிலனும் புன்செய்யும் ஊரும், ஊரிருக்கையும், மனையும், மனைப்படப்பையும் மன் றும், கன்றும், குளமும், கொட்டகமும், புற்றும், தெற்றியும் காடும், பீடிலிகையும், களரும், உவரும் ஓடையும், உடைப்பும், ஆறும் ஆறிடு படுகையும், மீன்பயில் பள்ளமும், தேன்பயில் பொதும்பும் மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும், கிடங் கும், கேணியும், ஏரியும், ஏரிநீர்க் கோப்பும் உள்ளிட்டு நீர்பூசி நெடும்பரம்பு எறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்த எவ்வகைப் பட்டதும் உண்ணிலம் ஒழிவின்றி" வழங்கப்பட்டது எனச் செப்பேடு சோழர் காலத்து உரைநடையில் சுவைபடச் சொல்கிறது.

கொடையாக வழங்கப்பட்ட ஊரிலிருந்து வருகின்ற நாடாட்சி, ஊராட்சி, வட்டிநாழி, புதாநாழி, வண்ணாரப் பாறை, கண்ணாலக்கானம், குசக்காணம், இடைப்பாட்டம், தறியிறை, தரகு, தட்டாரப்பாட்டம், மன்றுபாடு, மாவிறை, தீயெரி, விற்பிடி, வாலமஞ்சாடி, நல்லா, நல்லெருது, நாடு காவல், ஊடுபோக்கு, இலைக்கூலம், நீர்க்கூலி, உல்கு, ஓடக்கூலி முதலிய வரிகளை கோத்தொட்டு உண்ணாது, எவ்வகைப்பட்ட வரிகளும் கோக்கொள்ளாதே இறைவனே கொள்வதாக எனவும் செப்பேடு விவரிப்பதால் சோழர் காலத்து இருந்த வரிகளை யும் அறிய முடிகிறது.

திருவாலங்காட்டுக் கோயிலுக்குக் கொடையாக வழங்கப் பட்ட ஊருக்குச் சில உரிமைகளையும் இராசேந்திரசோழன் வழங்கியுள்ளான். இதனை சுட்டோட்டால் மாட மாளிகை எடுக்கப் பெறுவதாகவும், துரவு கிணறு இழிச்சப்பெறுவதாக வும், காவு தெங்கிடப் பெறுவதாகவும், மருவும் தமனகமும், இரு வேலியும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும் பலாவும், தெங்கும் கமுகும் உள்ளிட்ட பல்லுருவிற் பயன் மரம் இடவும், நடவும் பெறுவதாகவும், பெருஞ்செக்கிடப் பெறுவதாகவும், இவ்வூர் எல்லை வட்டத்துள்ள தெங்கும் பனையும் ஈழவர் ஏறப் பெறாததாகவும், இவ்வூர் ஏரிநீர் ஏற்குமளவும், ஏற்றுக் கோக்கு மளவும் கோக்கத்தக்க வகையில் கரையை உயர்த்திக்கொள்ளப் பெறுவதாகவும் எனச் செப்பேடு அழகுத் தமிழில் சொல்லிச் செல்கிறது. சோழர் காலத்தில் வீடு கட்டுவதாக இருந்தாலும், பயன் மரங்கள் நடுவதாக இருந்தாலும், கால்வாய்க் கரைகளை உயர்த்துவதாக இருந்தாலும் அரசனின் அனுமதி பெற்றே செய்தல் வேண்டும் என்பதை இச்செப்பேட்டின் மூலம் அறிய இயல்கிறது.

சோழர் கால வரலாற்றையும், சோழர் காலச் சமுதாய வரலாற்றையும் சிறப்புற எடுத்துக்கூறும் இவ் அரிய திருவாலங் காட்டுச் செப்பேட்டுத் தொகுதியினைப் பொதுமக்கள் அனை வரும் கண்டுகளிக்குமாறு இராசராச சோழன் கலைக்கூடத் திற்குச் சென்னை அருங்காட்சியகம் வழங்கியுள்ளது.

✿

## குறிப்பு

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில பொருட்கள் தற்போது இந்த அருங்காட்சியகத்தில் இல்லை. காரணம் அவற்றை நன்கொடையாக அளித்தவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள்.